**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்**

**ஏழாவது பாராளுமன்றம்**

(முதலாவது கூட்டத்தொடர்)

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 344**

# 2015ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழுவின்

# அறிக்கை

குழுவின் தவிசாளர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா**

அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது

2014, நவெம்பர் மாதம் 17 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தால்
அச்சிடப்படுமாறு பணிக்கப்பட்டது

**(திருத்தப்பட்ட பிரதி )**

## ***2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு***

***குழு***

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன

கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ அதாவுத செனெவிரத்ன

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ

கௌரவ முத்து சிவலிங்கம்

கௌரவ லசந்த அலகியவன்ன

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி

கௌரவ கந்தையா பிரேமச்சந்திரன்

கௌரவ பொன். செல்வராசா

கௌரவ ஆர். யோகராஜன்

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ சில்வேஸ்திரி அலன்றின்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஜானக பண்டார

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க

கௌரவ ஹுனைஸ் பாறூக்

# அறிக்கை

2014, ஒக்தோபர் மாதம் 21ஆம் திகதி பாராளுமன்றச் சபை முதல்வரால் சமர்ப்பிக்கப்பட்ட பின்வரும் பிரேரணை பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

"பாராளுமன்ற சபை முதல்வர்,— 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,— 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தொடர்பான குழுநிலை நிகழ்ச்சி நிரலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காலம், 17 தினங்களாக அமைவதாலும்,

வரவு செலவுத் திட்ட குழுநிலை நிகழ்ச்சி நிரலுக்காக நாளொன்றுக்கு சுமார் 8 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதோடு, ஒரே தினத்தில் பல்வேறு அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாட நேர்ந்துள்ளதால், அதற்கிணங்க ஒரு செலவுத் தலைப்பிற்காக சுமார் 2 மணித்தியாலங்களே ஒதுக்கப்பட்டுள்ளமையாலும், அதற்கிணங்க ஒவ்வொரு அமைச்சிலும் செலவுத் தலைப்புக்களை கலந்துரையாடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் வரையறுக்கப்பட்டுள்ளமையாலும்,

பாராளுமன்றத்தின் அரசாங்க கட்சியின் முதற்கோலாசான் மற்றும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் ஆகியோரின் இணக்கத்தின் பிரகாரம் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்ட இணைப்பில் குறிப்பிடப்பட்ட 22 அமைச்சுக்களினதும் விசேட அலுவல்களுக்கான செயலகத்தினதும் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் நியமிக்கப்படல் வேண்டும்.

   (ஆ) 95 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், அக்குழுவானது அரசாங்கக்கட்சியிலிருந்தும் எதிர்க்கட்சியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட இருபத்தியொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

3. அக்குழுவானது

   (அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்,

   (ஆ) ஆட்கள், பத்திரங்கள் மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும் யாரேனும் நபரைப் பாராளுமன்றத்திற்கு அல்லது அக்குழுவின் முன் சமுகமளிக்குமாறு உத்தரவிடுவதற்கும் அதிகாரம் உடையதாய் இருத்தல் வேண்டும்.

4. மேற்படி தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்களின் குழுநிலை ஆய்வு ஆரம்பிக்கும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அக்குழு அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இணைப்பு

1. விசேட அலுவல்களுக்கான செயலகம்
   - i. நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சர்
   - ii. மனிதவள அமைச்சர்
   - iii. கிராமிய அலுவல்கள் அமைச்சர்
   - iv. உணவு பாதுகாப்பு அமைச்சர்
   - v. நகர அலுவல்கள் அமைச்சர்
   - vi. சமூக நலன்புரி அமைச்சர்

vii. நுகர்வோர் நலன்புரி அமைச்சர்

viii. தேசிய வள அமைச்சர்

ix. விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர்

x. சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சர்

2. பௌத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு
3. தபால் சேவைகள் அமைச்சு
4. தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு
5. மீள்குடியேற்ற அமைச்சு
6. சமூக சேவைகள் அமைச்சு
7. அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
8. அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு
9. தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு
10. மக்கள் தொடர்பு, மக்கள் அலுவல்கள் அமைச்சு
11. அராசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு
12. உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு
13. தேசிய மரபுரிமைகள் அமைச்சு
14. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
15. தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு
16. சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு
17. தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு
18. தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு
19. கலாசார, கலை அலுவல்கள் அமைச்சு
20. வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சு
21. சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு
22. தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு
23 விசேட கருத்திட்டங்களுக்கான அமைச்சு

அதற்கிணங்க, கௌரவசபாநாயகரால் 2014ஒக்தோபர் மாதம் 23ஆம்திகதிகௌரவநிமல்சிறிபாலதசில்வாஅவர்களைதவிசாளராகக்கொண்டகுழுவில்சேவை யாற்றுவதற்குபின்வரும்உறுப்பினர்கள்தெரிவுசெய்யப்பட்டனர்.

கௌரவ டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன
கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம
கௌரவ தினேஷ் குணவர்தன
கௌரவ அதாவுத செனெவிரத்ன
கௌரவ மஹிந்த சமரசிங்ஹ
கௌரவ முத்து சிவலிங்கம்
கௌரவ லசந்த அலகியவன்ன
கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா
கௌரவ ஜோன் அமரதுங்க
கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி
கௌரவ கந்தையா பிரேமச்சந்திரன்
கௌரவ பொன். செல்வராசா
கௌரவ ஆர். யோகராஜன்
கௌரவ அகில விராஜ் காரியவசம்
கௌரவ சில்வேஸ்திரி அலன்றின்
கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா
கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே
கௌரவ ஜானக பண்டார
கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க

கௌரவ ஹுனைஸ் பாறூக்

பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கு ஏற்ப 22 அமைச்சுக்கள் மற்றும் சிறப்புச் செயற்பாடுகளுக்கான செயலகம் ஆகியவை தொடர்பான செலவுத் தலைப்புகள் பற்றி உங்களது குழுவினால் கலந்துரையாடுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

2014ஒக்தோபர் 23 ஆம் திகதி நடைபெற்ற அதன் முதலாவது கூட்டத்தில் 22 அமைச்சுக்கள் மற்றும் சிறப்புச் செயற்பாடுகளுக்கான செயலகம் ஆகியன தொடர்பான செலவுத் தலைப்புகள் பற்றி 2014நவெம்பர் மாதம் 04 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை மு.ப. 10.30 மணியிலிருந்து பி.ப. 4.30 மணி வரை பரீசீலனைக்கு எடுத்துக் கொள்வதென தங்கள் குழு தீர்மானித்தது.

அதற்கமைய சகல பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பங்கேற்புடன் வெளிப்படையானதும் பயன் மிக்கதுமான கலந்துரையாடலை நடத்துவதற்கு தங்கள் குழு விரும்பியதால் குழுவின் கலந்துரையாடல்களில் அனைத்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளலாம் என்பது தொடர்பாக தங்கள் குழு நிகழ்ச்சி நிரல் ஒன்றைத் தயாரித்து அதனை சகல உறுப்பினர்களுக்கும் 2014 ஒக்தோபர் மாதம் 25 ஆம் திகதி அனுப்பி வைத்தது. இவ்வாறான கலந்தறையாடல் கடந்த காலங்களில் பல தீர்க்கப்படாத விடயங்களுக்கு தீர்வைப்பெற்றுக்காள்ள வழி வழுத்த்தது என்பதைக் குழு தெரிவிக்க விரும்புகின்றது. அவ்வாறு சகல பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பி வைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் இவ்வறிக்கையின் **பின்னிணைப்பு 1** இல் தரப்பட்டுள்ளது.

அதேபோன்று, அமைச்சின் செயலாளரையும், செயலாளர் அவசியம் எனக் கருதும் சம்பந்தப்பட்ட அமைச்சினதும் அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களினதும் அதிகாரிகள் மற்றும் திறைசேரியின் அதிகாரிகள், தேசிய வரவு செலவு திட்ட திணைக்கள அதிகாரிகள், திட்டமிடலுக்கான தேசிய திணைக்கள அதிகாரிகள், அரச கணக்கீட்டுத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரை குழுவின் கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதற்கு வரவழைப்பதெனவும் தேவையான தகவல்ளைப் பெற்றுக்கொள்வதெனவும் தங்கள் குழு தீர்மானித்தது.

தங்கள் குழு அதன் கலந்துரையாடலை 2014நவெம்பர் 04 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு ஆரம்பித்து 2014நவெம்பர் 12 ஆம் திகதி பி.ப. 4.30 மணிக்கு முடிவுறுத்தியது.

வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடும் செயற்பாடானது 2008, 2011,2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்றது போன்று இம்முறையும் ஐந்தாவது தடைவயா தொடர்ந்தது. பல முக்கிய மற்றும் தீர்க்கப்படாத விடயங்கள் கூட்டங்களில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அமைச்சுகளின் முக்கிய உத்தயொகத்தர்கள் மற்றும் திறைசேறி உத்தியொகத்தர்களுடன் விரிவாக ஆராயப்பட்டு தெளிவுபடுத்தப்பட்டு தீர்க்கப்பட்டதனால், குழுநிலை விவாதத்திற்கு முன்னர் தெரிகுழு ஒன்றில் வருடாந்த மதிப்புரைகளைக் கலந்துரையாடுவதற்கான இந்நடைமுறை வெற்றிகரமானதும் ஆக்கபூர்வமானதுமென நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் தங்கள் குழு மகிழ்ச்சியடைகின்றது. இக் குழுதொடர்பிலான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆர்வம் மற்றும் அதன் கலந்தறையாடல்களில் அவர்களின் பங்களிப்புதொடர்பில் உங்களது குழு அதன் பாராட்டுக்ளைத்தெரிவிக்கின்றது.

நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவஅமைச்சரும் தெரிகுழுவின் தவிசாளருமான கௌரவ நிமல் சிறிபால த சில்வா அவர்கள் சகல அமைச்சுகள் தொடர்பான கலந்துரையாடல்களின் போது நடுவராக கூட்டங்களுக்குத் தலைமை வகித்து பாராளுமன்ற நடைமுறைகள் மற்றும் சம்பிரதாயங்களிலிருந்து தான் பெற்ற 25 வருட கால அனுபவத்தைப் பயன்படுத்தி இந்நிகழ்வை வெற்றிகரமாக்குவதில் வழங்கிய அவரின் சேவைகளை தங்கள் குழு பாராட்டுகின்றது. பல முக்கியபொது விடயங்கள் தொடர்பான கலந்துறையாடல்களிலும் அக்கலந்துறையாடல்ளை ஏற்றுக்காள்ளக்கூடிய மற்றும் முடியுமான தீர்வுகளின் பால் இட்டுச்செல்வதில் அவர் கூடிய கவணம்செலுத்தினார்.

மேற்சொல்லப்பட்ட அமைச்சுக்களின் கீழ் ஒதுக்கப்பட்ட விடயங்களுக்கும் பணிகளுக்கும் பொறுப்பாக்கப்பட்ட கௌரவ அமைச்சர்களின் வருகை, உறுப்பினர்களுக்கு விடயங்களை விளக்கிக் கூறுவதில் பங்களிப்பு மற்றும் வினாக்களுக்கு விடையளித்தல் ஆகியவற்றை தங்கள்

குழு பாராட்டுகின்றது.

ஒவ்வொரு அமைச்சின் கீழ் வரும் அமைச்சுகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பான பல்வேறு விடயங்களை கலந்தாலோசிக்கும் குழுக் கூட்டங்களில் சமூகமளித்திருந்த குழு உறுப்பினர்கள் மற்றும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் பங்களிப்புகளுக்காக குழு அதன் பாராடுதல்களைத் தெரிவிக்கின்றது.

அமைச்சுக்களின் செயலாளர்களினால் வழங்கப்பட்ட பங்களிப்புகள் மற்றும் கூட்டங்களுக்குச் சமூகமளித்திருந்த பிரதான அலுவலர்கள் ஆகியோரை தங்களது குழு பாராட்டுவதோடு, ஒவ்வொரு கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் அவர்கள் வழங்கிய எண்ணிலடங்காத சமர்ப்பணங்கள் பற்றியும் அவர்களுக்கு நன்றி கூறுகிறது.

குழுவிற்கு உதவி புரிவதற்கு சகல கூட்டங்களிலும் சமூகமளித்து குழுவிற்குத் தேவையான சகல தரவுகள் மற்றும் தகவல்களை வழங்கிய திறைசேரி அலுவலர்களுக்கும் தங்கள் குழு நன்றியுடையதாகவுள்ளது.

இம்முயற்சியில் பாராளுமன்ற செயலகத்தினால் வழங்கப்பட்டிருந்த சேவைகள் மிகவும் வினைத்திறன் வாய்ந்ததாகவிருந்தமையை தங்கள் குழு அவதானிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது.

அமைச்சுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் அலுவலர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் சுமுகமாகவும் சிநேகபூர்வமானதாகவும் இருந்ததோடு இக்கலந்துரையடல்கள் மூலம் பல தீர்க்கப்படாத விடயங்கள் தீர்க்கப்படலாம் என்பதை தங்கள் குழு தெரிவிக்க விரும்புகின்றது.

இந்த நடவடிக்கை எதிர்காலத்திலும் மேம்படுத்தப்பட்டு தொடரப்படல் வேண்டுமென தங்கள் குழு பாராளுமன்றத்திற்கு விதந்துரைப்பதோடு, ஒவ்வொரு வருடத்திலும் குழு நிலை விவாதத்திற்கு முன்னர் சகல செலவுத் தலைப்புகளினதும் மதிப்பீடுகள் தெரிகுழுவினால் பரிசீலனை செய்யப்படுமானால் இந்த நடைமுறை மிகவும் பயன்மிக்கதாக அமையும் எனப் பிரேரிக்கப்படுகின்றது. இந்த நடைமுறை வரவு செலவுத் திட்டத்தின் முழுமையான பாராளுமன்றக் குழுநிலை விவாதத்தில் உறுப்பினர்களுக்குக் கிடைக்காத விடயங்களை அதிகாரிகளுடன் தெளிவுபடுத்திக்கொள்ளும் வாய்ப்பை இது வழங்கக் கூடியதான நல்லதொரு சந்திப்பை ஏற்படுத்துகின்றது. ஆத்துடன், நடப்பு ஆண்டின் போது ஏற்படுத்தப்பட்ட முன்னேற்றம் மற்றும் எதிர்வரும் ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னிலைப்படுத்துவதற்கும் இது வழிவகுக்கின்றது.

இந்த நடைமுறையைமேலும் வலுப்பெறச்செய்வதற்காக வருடம் முளுவதும் கலந்தறையாடல்களை நடாத்தக்கூடியவாறு நிரந்தர நிலையியற் குழு ஒன்றை அமைப்பதற்கு தங்கள் குழு பாராளுமன்றத்திற்கு விதந்துரைக்கிறது.

குழுக்கூட்டங்களில் வார்த்தைக்கு வார்த்தையாக பதிவுசெய்யப்பட்ட ஆவணங்கள் தொகுக்கப்பட்டு அவை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் இலகுவான உசாவுகைக்கென நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.குழுக் கூட்ட அறிக்கைகள் இவ்வறிக்கையின் **பின்னிணைப்பு 2** இல் தரப்பட்டுள்ளது.

கலந்தாலோசனைகளின் சாரம்சம் மற்றும் கூட்டங்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் ஆகியவற்றுடன் தங்களது குழுவினால் பரீசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அமைச்சுடனும் தொடர்புடைய செலவுத் தலைப்புகளின் கீழான 2015 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

**விஷேட தொழிற்பாடுகளுக்கான செயலகம் (சிரேஷ்ட அமைச்சர்கள்) ரூ** *'000*

| **தலைப்பு 3 - விஷேட தொழிற்பாடுகளுக்கான செயலகம் (சிரேஷ்ட அமைச்சர்கள்)** | 2013 | 2014 மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 411,216 | 533,000 | 529,100 |
| மீண்டெழும் செலவினம் | 305,780 | 367,350 | 376,000 |
| மூலதனச் செலவினம் | 105,435 | 165,650 | 153,100 |

**01 - பொது நிருவாகமும் தாபன சேவைகளும்**

| | | | |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 113,632 | 127,550 | 132,800 |
| மீண்டெழும் செலவினம் | 110,391 | 123,500 | 128,600 |
| மூலதனச் செலவினம் | 3,242 | 4,050 | 4,200 |
| **02 - நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்புக்கான அமைச்சர் (சிரேஷ்ட)** | | | |
| மொத்தச் செலவினம் | 42,672 | 28,100 | 36,200 |
| மீண்டெழும் செலவினம் | 20,343 | 24,100 | 25,900 |
| மூலதனச் செலவினம் | 22,328 | 4,000 | 10,300 |
| **03 - மனித வளங்களுக்கான அமைச்சர் (சிரேஷ்ட)** | | | |
| மொத்தச் செலவினம் | 19,364 | 25,850 | 37,000 |
| மீண்டெழும் செலவினம் | 18,858 | 23,350 | 24,000 |
| மூலதனச் செலவினம் | 506 | 2,500 | 13,000 |
| **04 - கிராமிய விவகாரங்களுக்கான அமைச்சர் (சிரேஷ்ட)** | | | |
| மொத்தச் செலவினம் | 19,633 | 42,075 | 30,350 |
| மீண்டெழும் செலவினம் | 18,020 | 23,375 | 24,450 |
| மூலதனச் செலவினம் | 1,612 | 18,700 | 5,900 |
| **05 - உணவுப் பாதுகாப்புக்கான அமைச்சர் (சிரேஷ்ட)** | | | |
| மொத்தச் செலவினம் | 29,703 | 24,225 | 25,800 |
| மீண்டெழும் செலவினம் | 19,475 | 21,925 | 22,900 |
| மூலதனச் செலவினம் | 10,229 | 2,300 | 2,900 |
| **06 - நகர விவகாரங்களுக்கான அமைச்சர் (சிரேஷ்ட)** | | | |
| மொத்தச் செலவினம் | 18,181 | 28,650 | 32,200 |
| மீண்டெழும் செலவினம் | 15,982 | 20,450 | 22,100 |
| மூலதனச் செலவினம் | 2,199 | 8,200 | 10,100 |
| மீண்டெழும் செலவினம் | 21,839 | 26,325 | 27,075 |
| மூலதனச் செலவினம் | 10,974 | 3,900 | 3,900 |
| **07 - சமூக நலன்புரி அமைச்சர் (சிரேஷ்ட)** | | | |
| மொத்தச் செலவினம் | 18,275 | 37,125 | 26,675 |
| மீண்டெழும் செலவினம் | 17,525 | 23,325 | 23,775 |
| மூலதனச் செலவினம் | | | |
| **08 - நுகர்வோர் நலன்புரி அமைச்சர் (சிரேஷ்ட)** | | | |
| மொத்தச் செலவினம் | 22,001 | 36,225 | 32,050 |
| மீண்டெழும் செலவினம் | 18,917 | 30,125 | 24,950 |
| மூலதனச் செலவினம் | 750 | 13,800 | 2,900 |
| **09 - தேசிய வளம் அமைச்சர் (சிரேஷ்ட)** | | | |
| மொத்தச் செலவினம் | 31,836 | 38,725 | 27,800 |
| மீண்டெழும் செலவினம் | 22,144 | 23,825 | 24,700 |
| மூலதனச் செலவினம் | 9,692 | 14,900 | 3,100 |
| **10 - விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் (சிரேஷ்ட)** | | | |
| மொத்தச் செலவினம் | 63,285 | 114,250 | 117,250 |
| மீண்டெழும் செலவினம் | 22,286 | 27,050 | 27,550 |
| மூலதனச் செலவினம் | 40,999 | 87,200 | 89,700 |
| **11 - சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சர் (சிரேஷ்ட)** | | | |
| மொத்தச் செலவினம் | 32,633 | 30,225 | 30,975 |
| மீண்டெழும் செலவினம் | 21,839 | 26,325 | 27,075 |
| மூலதனச் செலவினம் | 10,794 | 3,900 | 3,900 |

விஷேட தொழிற்பாடுகளுக்கான (சிரேஷ்ட அமைச்சர்கள்) செயலகத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 3 இற்கான மதிப்பீடுகளை குழு ஆராய்ந்துஅங்கீகரித்தது.

குழுவின் முன்னைய ஆண்டினது சிபாரிசுகளைக் குறிப்பீடுசெய்த மற்றும் இந்த அமைச்சுகளின் கிழ்வரும் விடயங்கள் தொடர்பில் கலந்தறையாடுவதற்கு ஒரு தளம் தேவையென கருதிய குழு கௌரவ சபாநாயகருடன் கலந்துரையாடியதின் பின்னர் விஷேட

தொழிற்பாடுகளுக்கான (சிரேஷ்ட அமைச்சர்கள்) ஒரு ஆலோசனைக் குழுவை நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டமென வலுவாக சிபாரிசுசெய்த்து

அரசாங்கபொருப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையிலுள்ள சிபாரிசுளை நடைமறைப்படுத்துவதற்காக தேசியநெறிப்படுத்தல் குழவென்று நியமிக்கப்பட்டுள்மை தொடர்பில் அவதானம் செலுத்திய குழு இந்த அமைச்சுக்களின் செயற்பாடுகின் முன்னேற்றம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிப்பதற்கு பொருத்தமானதொரு வழிமுறை இருக்வேண்டமெனக் கருதுகின்றது.

நாட்டில் பரவிவரும் சிறுநிரகநோயனை தடுப்பதற்கும் குணப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்க்கள்தொடர்பில் கவணம்செலுத்திய குழு 11 அமைச்சுக்கள் ஊடாகசெயலாற்றுகைத் திட்மொன்று டைமறைப்படுத்தவேண்டமென குறிப்பட்டது.மேலும் தேசிய உணவுப் பாதுகாப்பு முறைமையைக் கண்காணித்து, மீளாய்வு செய்து மதிப்பீடு செய்வதற்கும் 2015-2020 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய உணவுப் பாதுகாப்புக் கொள்கை மற்றும் தேசிய உணவுத் திட்டம் ஆகியவற்றை வகுத்தமைப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுப்பதற்குமான ஒரு தேசிய நெறிப்படுத்தல் குழுவை நியமிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதாக குழுவுக்கு அறிவிக்கப்பட்டது..

விஞ்ஞான விவகாரங்களுக்கான அமைச்சர் (சிரேஷ்ட) கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரன அவர்கள், அமைச்சரவையினால் ஒரு 3 வருட கருத்திட்டமாக அங்கீகரிக்கப்பட்டு தற்பொழுது தொழிற்படுகின்ற விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க விடயங்களுக்கான ஒருங்கிணைப்பு செயலகத்திலுள்ள (COSTI) செயற்பாடுகளுக்கு தொடர்ந்தும் நிதிகளைக் கிடைக்கச் செய்வதன் அவசியத்தை வலியுறுத்தினார்கள். திறைசேரியைப் பிரதிநிதிப் படுத்தி சமூகமளித்திருந்த அதிகாரிகள்,'COSTI' இற்கு நிரந்தரமான ஒரு நிறுவனம் தாபிக்கப்பட்டிருக்குமாயின் மாத்திரம் ஒரு செலவினத் தலைப்பின் கீழ் நிதிகள் ஒதுக்கப்படுவதை கருத்திற்கொள்ளலாமென விளக்கம் அளித்தனர்.

குழு, கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரன அவர்களின் செயல் திட்டத்தையும் முயற்சிகளையும் பாராட்டியதுடன் அத்தகைய அமைச்சின் கீழ் தேவையான மொத்த நிதிகள் வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தில் வழங்கப்படுதல் வேண்டுமென்ற திறைசேரிக்கான அதன் முன்னைய சிபாரிசை மீளவலியுறுத்துவதற்கும் விரும்பியது.

**புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு** *ரூ. '000*

| புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு | 2013 | 2014 மீள் வரவுசெல வுத்திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 1,774,082 | 2,000,216 | 1,955,000 |
| மீண்டெழும் செலவினம் | 931,364 | 1,277,225 | 1,205,000 |
| மூலதனச் செலவினம் | 842,717 | 722,991 | 750,000 |
| **101 - புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சர்** | | | |
| மொத்தச் செலவினம் | 603,201 | 665,136 | 613,880 |
| மீண்டெழும் செலவினம் | 118,246 | 171,010 | 147,650 |
| மூலதனச் செலவினம் | 484,955 | 494,126 | 466,230 |
| 201 – புத்த விவகாரங்கள் திணைக்களம் | | | |
| மொத்தச் செலவினம் | 681,937 | 846,470 | 808,430 |
| மீண்டெழும் செலவினம் | 578,050 | 766,420 | 714,680 |
| மூலதனச் செலவினம் | 103,887 | 80,050 | 93,750 |
| **202 – முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் தணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 178,533 | 91,690 | 150,115 |
| மீண்டெழும் செலவினம் | 58,198 | 60,640 | 77,965 |

| | | | |
|---|---|---|---|
| மூலதனச் செலவினம் | 120,335 | 31,050 | 72,150 |
| **203 – கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 88,163 | 143,705 | 124,240 |
| மீண்டெழும் செலவினம் | 61,227 | 121,865 | 100,025 |
| மூலதனச் செலவினம் | 26,936 | 21,840 | 24,215 |
| **204 – ஹிந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 186,232 | 214,810 | 214,980 |
| மீண்டெழும் செலவினம் | 81,374 | 120,660 | 123,455 |
| மூலதனச் செலவினம் | 104,857 | 94,150 | 91,525 |
| **205 –பொது நம்பிக்கைபொஷப்பாளர் திணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 36,016 | 38,405 | 43,355 |
| மீண்டெழும் செலவினம் | 34,269 | 36,630 | 41,225 |
| மூலதனச் செலவினம் | 1,747 | 1,775 | 2,130 |

பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சின் 101, 201, 202, 203, 204 மற்றும் 205 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை குழு குழு ஆராய்ந்து அங்கீகரித்தது.

நேர்முகப் பரீட்சைகளில் தஹம் பாடசாலைச் சான்றிதழ்களுக்கு மேலதிகப் புள்ளிகளை வழங்குவதற்காக முன்னைய குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட சிபாரிசு விடயம் பொருத்தமான நடவடிக்கைக்காக பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது எனவும், ஆசிரியர்களை ஆட்சேர்த்துக்கொள்ளும் போது தஹம் பாடசாலைச் சான்றிதழ்களுக்கு விஷேட கவனம் செலுத்தப்படும் எனவும் குழுவுக்கு அறிவிக்கப்பட்டது..

புதிய சமய வணக்க வழிபாட்டு ஸ்தலங்களைத் தாபிப்பது தொடர்பில், புதிய வணக்க வழிபாட்டு ஸ்தலங்களை நிர்மாணிப்பதற்கு முன்னர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக செய்திப்பத்திரிகைகளினூடாக பரந்தளவில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது எனவும் குழுவுக்கு அறிவிக்கப்பட்டது.

கிறிஸ்தவ தஹம் பாடசாலை பாடநூல்கள் கிறிஸ்தவ தஹம் பாடசாலைகளில் மாத்திரமே பயன்படுத்த முடியும் எனவும் தனியான நூல்கள் அவசியமில்லை எனவும் கிறிஸ்தவ மதகுருக்கள் சபை சுட்டிக் காட்டியிருந்ததால் அந்த நூல்கள் வழங்கப்படவில்லை எனவும் குழுவுக்கு அறிவிக்கப்பட்டது

முன்பிருந்தது போல் பாடசாலை மாணவர்கள் அனைவரையும் நல்ல பிரஜைகளாக வளர்த்தெடுப்பதற்கான சமயக் கல்விகளை வழங்குவதற்கும் சிறந்த ஒரு மத சூழலை உருவாக்குவதற்கும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கள்தொடர்பில் உறுப்பினர்கள்தெரிவித்த கருத்துக்களுக்கு குழு இணக்கம்தெரிவித்த்து.இந்த விடயம் புத்த சாசன மற்றும் கல்வி ஆகிய விடயங்களுக்கான உரிய ஆலோசனைக் குழுக்களில் கலந்துரையாடப்படுதல் வேண்டுமென்பதையும் மற்றும் கல்வி அமைச்சின் ஒருங்கிணைப்பில் பொருத்தமான கொள்கை ஒன்று வகுத்தமைக்கப்படுதல் வேண்டுமென்பதையும் சிபாரிசு செய்வதற்கு குழு தீர்மானித்தது.

தேவையான சமய ஸ்தலங்களுக்கு நிதி உதவியை வழங்கும் பொருட்டு தற்பொழுது உரிய மாவட்ட செயலகங்களுக்கு நிதிகள் விடுவிக்கப்படுவதாகவும் இந்த செயன்முறை காரணமாக, சில சந்தர்ப்பங்களில், தேவைப்படுத்தப்பட்டவாறு எதிர்பார்க்கப்பட்ட புனர்நிர்மாணப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதில்லை எனவும் குழுவின் கவனத்திற்குகொண்டுவரப்பட்டது

பொதுச் சட்டங்களுக்கும் மற்றும் சமய சட்டங்களுக்கும் இடையில் காணப்படுகன்ற வித்தியாசத்தைக் குறைக்கும் பொருட்டு சமய விவகாரங்களை நிருவகிக்கின்ற தற்போதைய சட்டங்கள் திருத்தப்பட வேண்டுமெனவும் குழு சிபாரிசுசெய்த்து.

**பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு**

| பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|

| ரூ.'000 | | மீள் வரவு செலவுத் திட்டம் | மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 2,724,020 | 4,255,360 | 4,616,000 |
| மீண்டெழும் செலவினம் | 1,151,898 | 1,405,360 | 1,416,000 |
| மூலதனச் செலவினம் | 1,572,121 | 2,850,000 | 3,200,000 |
| **135 - பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சர்** | | | |
| மொத்தச் செலவினம் | 1,922,913 | 3,156,560 | 3,278,000 |
| மீண்டெழும் செலவினம் | 954,221 | 1,176,060 | 1,180,000 |
| மூலதனச் செலவினம் | 968,692 | 1,980,500 | 2,098,000 |
| **293 - இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 801,107 | 1,098,800 | 1,338,000 |
| மீண்டெழும் செலவினம் | 197,677 | 229,300 | 236,000 |
| மூலதனச் செலவினம் | 603,430 | 869,500 | 1,102,000 |

குழு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 135, 293 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை குழு ஆராய்ந்து அங்கீகரித்தது.

கௌரவ முத்து சிவலிங்கம் அவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், கலாநிதி தமித டீ. சொய்ஸா, தாவரங்களைப் புதிதாக நடுதல் மற்றும் தாவரங்களை மீளிடுதல் ஆகியவற்றுக்காக பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு மானியத்தின் அளவுகள் பற்றி விளக்கமளித்தார். கௌரவ முத்து சிவலிங்கம், சிறுபற்றுநிலங்களின் அபிவிருத்திற்கு அமைச்சு ஆற்றிய சேவைகள் தொடர்பாக தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

பிராந்தியப் பெருந்தோட்டக் கம்பனிகளின் (RPCs) கோல்டென் பங்குதாரர் என்ற ரீதியில் அரசாங்கம் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏன் நடவடிக்கை எடுப்பதில்லை என தவிசாளர் வினவிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், கலாநிதி தமித டீ செய்ஸா, தனியார் உடமைக் கம்பனிகளுடன் செய்து கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (ப.ஒ.) என்பவற்றின் பிரகாரம் அந்த சகல கம்பனிகளிலிருந்தும் அரசாங்கம் குத்தகை வாடகைகளைப் பெற்றது என்றும், சில கம்பனிகளின் மூலம் மாத்திரமே பங்குலாபங்கள் செலுத்தப்படுகின்றன என்றும் குறிப்பிட்டார். தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திற்கு சொந்தக் கம்பனிகள் தமது இலாபங்களின் ஒரு பாகத்தைப் பங்களிக்கும் வகையில் அவற்றை ஊக்குவிப்பதற்கான பொறிமுறைத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென தவிசாளர் குறிப்பிட்டுக் கூறினார். அத்தகைய கம்பனிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்ககும் ஒரு 'பெருந்தோட்ட முகாமைத்துவக் கண்காணிப்புப் பிரிவை' அமைச்சு ஏற்கெனவே தாபித்திருந்தது எனவும் மற்றும் இந்த அம்சமும் அந்தப் பிரிவினால் கண்காணிக்கப்படும் எனவும் கௌரவ மஹிந்த சமரசிங்ஹ தெளிவுபடுத்தினார்.

பயிர்ச்செய்கை தவிர்ந்த ஏனைய பிரிவுகளில் அபிவிருத்தி நோக்கங்களுக்காக காணிளைப் பயன் படுத்துவதற்கு RPC நிறுவனங்கள் அரசாங்கத்துடன் இணங்கிப்போகவேண்டமென அந் நிறுவனங்கள்வேண்டமென குழு பரிந்தறைத்த்து

**தேசிய மரபுரிமைகள் அமைச்சு** ரூ. '000

| தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 2013 | 2014 மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 1,187,789 | 1,570,762 | 1,640,000 |
| மீண்டெழும் செலவினம் | 853,678 | 1,029,687 | 1,090,000 |
| மூலதனச் செலவினம் | 334,111 | 541,075 | 550,000 |
| **142 - தேசிய மரபுரிமைகள் அமைச்சர்** | | | |
| மொத்தச் செலவினம் | 195,973 | 329,620 | 306,500 |

| | | | |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 98,654 | 161,060 | 162,550 |
| மூலதனச் செலவினம் | 97,320 | 168,520 | 143,950 |
| **207-தொலபொருளியல் திணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 695,646 | 817,950 | 775,500 |
| மீண்டெழும் செலவினம் | 571,681 | 649,660 | 689,500 |
| மூலதனச் செலவினம் | 123,965 | 168,290 | 86,000 |
| **208 –தேசிய நூதன சலைகள் திணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 151,218 | 252,245 | 282,296 |
| மீண்டெழும் செலவினம் | 105,923 | 125,195 | 138,646 |
| மூலதனச் செலவினம் | 45,296 | 127,050 | 143,650 |
| **209 –தேசிய ஹவடிக் கூடத் திணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 144,951 | 170,047 | 275,704 |
| மீண்டெழும் செலவினம் | 77,421 | 93,772 | 99,304 |
| மூலதனச் செலவினம் | 67,531 | 77,175 | 176,400 |

தேசிய மரபுரிமைகள் அமைச்சின் 142, 207-209 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை குழுஆராய்ந்ததுஅங்கீகரித்த்து.

தொல்பொருள் ஆய்வு ஆராய்ச்சி நடவடிக்கைகளில் இலங்கை இராணுவப் படையினரும் மற்றும் இலங்கைப் பொலிஸ் படையினரும் நல்கிய உதவி ஒத்தாசைகளை குழு பாராட்டியது. கிழக்கு மாகாணத்திலுள்ள 'தீகவாவி தூபியை', அது புத்த பெருமானின் புனித தந்தத்தைக் கொண்டமைந்துள்ள ஒரேயொரு பௌத்த ஆலயம் என்பதால், அந்த ஆலயத்தைப் புனரமைத்து பக்தர்களின் வணக்கவழிபாடுகளுக்கு திறந்து வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்கப்படவேண்டமென குழு பரிந்தறைத்த்து.

100 வருடங்களுக்கும் மேற்பட்ட கால பழமை வாய்ந்த சகல கட்டிடங்களையும் பராமரித்துப் பாதுகாப்பது என்பது தேசிய மரபுரிமைகள் அமைச்சுக்கு சாத்தியமாகவோ அல்லது செயல்முறையானதாகவோ இருக்க மாட்டாது என்பதுதொடர்பில் கலந்தறையாடிய குழு அத்தகைய கட்டிடங்கள் அவற்றின் வெளித்தோற்றங்களைப் பாதுகாத்துபராமரிக்கப்பட்டு பொது நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது மிகவும் பொருத்தமானதாக அமையும் எனவும், இந்த விடயத்தைக் கருத்திற்கொள்ளும் பொருட்டு தேசிய மரபுரிமை வனவிலங்கு பகுதிகள் தொடர்பான சட்டமூலத்திற்கு திருத்தங்களை மேற்கொள்ளும் வகையிலும் மற்றும் மிகவும் செயல்முறை சாத்தியமான ஒரு அணுகுமுறையைப் பின்பற்றுவதற்கான ஏதாவது தேவையான திருத்தங்கள் இருக்கமாயின் அவற்றை உள்ளடக்கி பொருத்தமான சிபாரிசுகளை முன்வைக்கும் வகையிலும் தேசிய மரபுரிமை பற்றிய ஆலோசனைக் குழுவின் கீழ் ஒரு உப குழு நியமிக்கப்படவேண்டமெனவும் குழு பரிந்தறைத்த்து.

தொல்பொருள் திணைக்களத்தில் சிரேஷ்ட பதவிகளில் பல வெற்றிடங்கள் நிலவுகின்றமையை கவணத்தில்காண்ட குழு நிலவுகின்ற வெற்றிடங்களை முன்கூட்டியே நிரப்பக்கூடிய வகையில், ஆட்சேர்ப்புத் திட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஒரு அமைச்சரவை விஞ்ஞாபனப் பத்திரத்தை சமர்பிக்குமாறு சிபாரிசு செய்தது. தொல்பொருள் திணைக்களத்தில்நிலவுகின்றவெற்றிடங்களை நிறப்புமாறு முன்னைய குழுவினால்செய்யப்பட்ட சிபாரிசுளையும் குழு நனைவுபடுத்தியது.

**கலாசார, கலை அலுவல்கள் அமைச்சு** ரூ.'000

| **கலாசார, கலை அலுவல்கள் அமைச்சு** | 2013 | 2014 மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 1,377,530 | 1,913,690 | 2,650,000 |
| மீண்டெழும் செலவினம் | 82,647 | 1,064,04 | 1,150,000 |
| மூலதனச் செலவினம் | 514,883 | 849,250 | 1,500,000 |
| **177 - கலாசார, கலை அலுவல்கள் அமைச்சர்** | | | |

| | | | |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 1,036,221 | 1,322,340 | 1,915,985 |
| மீண்டெழும் செலவினம் | 562,537 | 658,640 | 711,985 |
| மூலதனச் செலவினம் | 473,684 | 663,700 | 1,204,000 |
| **206 – கலாசார அலுவல்கள் திணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 341,309 | 591,350 | 734,015 |
| மீண்டெழும் செலவினம் | 300,110 | 405,800 | 438,015 |
| மூலதனச் செலவினம் | 41,199 | 55,550 | 296,000 |

கலாசார, கலை அலுவல்கள் அமைச்சின்177, 206 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை குழுஆராய்ந்துஅங்கீகரித்தது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்திலுள்ள வெற்றிடங்களை மீளநிரப்புவது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் (அ.உ.) சம்பந்தமான ஒரு வழக்கு விசாரிக்கப்பட்டு வருவதால் உதவி கலாசார ஊக்குவிப்பு உத்தியோகத்தர் ஆளணியில் நிலவும் வெற்றிடங்கள் தவிர, ஏனைய சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிந்ததுடன் சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவினால் அறிமுக்கப்படுத்தப்பட்ட சம்பளக் கட்டமைப்புகளில் காணப்படுகின்ற மாற்றங்களின் காரணமாக அதிகமான நிறுவனங்களில் இதே நிலைமை ஏற்பட்டிருந்தால் சமபளக் கட்டமைப்பில் நிலவுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என குழு விதந்துரைக்கின்றது.

**தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு**

| **தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு** **ரூ. '000** | 2013 | 2014 மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 416,467 | 576,250 | 707,800 |
| மீண்டெழும் செலவினம் | 256,707 | 314,550 | 357,800 |
| மூலதனச் செலவினம் | 159,760 | 261,700 | 350,000 |
| **134 -** தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | | | |
| மொத்தச் செலவினம் | 330,723 | 473,090 | 588,250 |
| மீண்டெழும் செலவினம் | 193,988 | 242,840 | 279,350 |
| மூலதனச் செலவினம் | 136,735 | 230,250 | 308,900 |
| **236 – அரச கரும்மொழிகள் திணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 85,744 | 103,160 | 119,550 |
| மீண்டெழும் செலவினம் | 62,719 | 71,710 | 78,450 |
| மூலதனச் செலவினம் | 23,025 | 31,450 | 41,100 |

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் 134, 236 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை குழுகலந்தாலோசித்துஅங்கீகரித்தது.

அமைச்சுக்குப் பொருத்தமான அதிகமான LLRC சிபாரிசுகள் ஏற்கெனவே செயற்படுத்தப்பட்டுள்ளதையும் எனவும், ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதில் சுருக்கமான ஒரு கொள்கையைச் செயற்படுத்துவதற்கான ஒரு 5 ஆண்டு வழிகாட்டல் திட்டம் நகல்செய்யப்பட்டுள்ளதையும்குழுஆராய்ந்தது.

பிரதேச செயலகங்களுக்கான சமூக ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக்கொள்வதில் சமூகத் தேவைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படவில்லை என அவதானித்த குழு நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட ஒரு போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டதால், அமைச்சரவை உப குழுவுக்கு தற்போதைய நடைமுறைகளிலிருந்து விலகிச் செயற்படுவதற்கு நேர்ந்திருந்தது என்பதை அவதானித்ததுடன், இந்த நிலையைத் தெளிவுபடுத்தி, அந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தைத் திருத்தியமைக்குமாறு கோரி அமைச்சு, ஒரு விஷேட அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் சிபாரிசு செய்தது.

**மீள்குடியேற்ற அமைச்சு**

| மீள்குடியேற்ற அமைச்சு<br>'ரூ.000 | 2013 | 2014<br>மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015<br>மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 486,980 | 403,458 | 378,050 |
| மீண்டெழும் செலவினம் | 167,878 | 174,605 | 192,000 |
| மூலதனச் செலவினம் | 319,102 | 228,853 | 186,050 |
| **145 - மீள்குடியேற்ற அமைச்சர்** | | | |
| மொத்தச் செலவினம் | 486,980 | 403,458 | 378,050 |
| மீண்டெழும் செலவினம் | 167,878 | 174,605 | 192,000 |
| மூலதனச் செலவினம் | 319,102 | 228,853 | 186,050 |

மீள்குடியேற்ற அமைச்சின் 145 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை குழுஆராய்ந்து அங்கீகரித்தது.

தற்பொழுது 90% மீள்குடியேற்றப் பணி நிறைவடைந்துள்ளதாகவும், 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதியாகும் போது ஏற்கெனவே 228,838 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளன என்பதையும், இன்னும் 7840 குடும்பங்கள் மாத்திரமே மீள்குடியேற்றப்படவுள்ளன என்பதையும் குழு அவதானித்தது.

**பொது உறவுகள் மற்றும் பொது விவகாரங்கள் அமைச்சு**

| பொது உறவுகள் மற்றும் பொது விவகாரங்கள் அமைச்சு<br>ரூ. '000 | 2013 | 2014<br>மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015<br>மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 226,297 | 376,700 | 426,830 |
| மீண்டெழும் செலவினம் | 62,407 | 78,700 | 76,830 |
| மூலதனச் செலவினம் | 163,890 | 298,000 | 350,000 |
| **183 - பொது உறவுகள் மற்றும் பொது விவகாரங்கள் அமைச்சர்** | | | |
| மொத்தச் செலவினம் | 226,297 | 376,700 | 426,830 |
| மீண்டெழும் செலவினம் | 62,407 | 78,700 | 76,830 |
| மூலதனச் செலவினம் | 163,890 | 298,000 | 350,000 |

குழு, பொது உறவுகள் மற்றும் பொது விவகாரங்கள் அமைச்சின்183 ஆம் இலக்க செலவினத் தலைப்புக்கான மதிப்பீடுகளை அங்கீகரித்தது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, பெலன்னறுவை, மிகிந்தலை, கதிர்காமம் மற்றும் மகியங்கனை ஆகிய நகரங்களில் ஆறு வாடிவீடுகளை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததையும் இவற்றில் மிகிந்தலை மற்றும் மகியங்கனை ஆகிய வாடிவீடுகளை 2014 ஆம் ஆண்டு முடிவடைய முன்னர் திறந்துவைக்க முடியும் என்பதையும் குழு அவதானித்ததுடன் ஒவ்வொரு வாடிவீட்டில் கிடைக்கக் கூடிய வசதிகள் மற்றும் ஒதுக்கீட்டுக் கட்டணங்கள் முதலியன அடங்கலாக வாடிவீடுகளின் ஒரு பட்டியலை பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் எனவும் குழு பிரேரித்தது.

**தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு**

| தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு<br>ரூ.'000 | 2013 | 2014<br>மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015<br>மதிப்பீடு |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 1,156,227 | 1,533,508 | 1,510,900 |
| மீண்டெழும் செலவினம் | 380,368 | 505,600 | 515,000 |
| மூலதனச் செலவினம் | 775,859 | 1,027,908 | 995,900 |
| **188 - தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சர்** | | | |
| மொத்தச் செலவினம் | | 150,383 | 94,900 |
| மீண்டெழும் செலவினம் | | 64750 | 64,950 |
| மூலதனச் செலவினம் | | 85,633 | 29,950 |
| **294 –தேசிய விளங்குக்காட்சிச் சலைகள் திணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 523,499 | 725,725 | 808,500 |
| மீண்டெழும் செலவினம் | 172,076 | 208,750 | 211,850 |
| மூலதனச் செலவினம் | 351,424 | 516,975 | 596,650 |
| **322 தேசிய தாவரவியல் திணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 632,727 | 657,400 | 607,500 |
| மீண்டெழும் செலவினம் | 208,292 | 232,100 | 238,200 |
| மூலதனச் செலவினம் | 424,435 | 425,300 | 369,300 |

தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சின் 188, 194, 322 ஆம் இலக்க செலவினத் தலைப்புக்களை குழு ஆராய்ந்து அங்கீகரித்தது.

இலங்கையிலுள்ள பொதுப் பொழுதுபோக்கு நிலையங்களையும் சுற்றுலாத் துறையையும் அபிவிருத்தி செய்வதில் தனியார் துறையை ஈடுபடுத்துவதற்கு உகந்த திட்டமொன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதை குழு சிபாரிசு செய்ததுடன் இந்த விடயத்தை இலகுபடுத்துவதாகவிருந்தால் ஏற்கெனவேயிருக்கின்ற சில நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றை சற்றுத் தளர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும் எனவும சிபாரிசு செய்தது.

பொ.உ.ப. மற்றும் ந.அ.அ.ச. ஆகியவற்றுடன் இணைந்து மிருகக் காட்சிசாலையை அபிவிருத்தி செய்து நவீனப்படுத்தும் நிமித்தம் ஒரு தலைமைத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு பொழுதுபோக்கு வசதிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என குழு விதந்துரைத்ததுடன் நீர்கொழும்புக் கடற்கரைப் பிரதேசத்தில் ஒரு ஓய்வுப் பூங்காவைத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் எனவும் குழு விதந்துரைத்தது.

**வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சு**

| **வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சு** | 2013 | 2014 மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 1,095,166 | 1,541,400 | 1,400,000 |
| மீண்டெழும் செலவினம் | 601,556 | 707,300 | 730,000 |
| மூலதனச் செலவினம் | 493,610 | 834,100 | 670,000 |
| **179 - குழு, வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சர்** | | | |
| மொத்தச் செலவினம் | 98,302 | 103,475 | 96,700 |
| மீண்டெழும் செலவினம் | 74,438 | 80,025 | 86,700 |
| மூலதனச் செலவினம் | 23,864 | 23,450 | 10,000 |
| **284 – வன விலங்கு பாதுகாப்பு திணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 996,864 | 1,437,925 | 1,303,300 |
| மீண்டெழும் செலவினம் | 527,118 | 627,275 | 643,300 |
| மூலதனச் செலவினம் | 469,746 | 810,650 | 660,000 |

வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சின் 179 மற்றும் 284 ஆம் இலக்க செலவினத் தலைப்புக்களைகுழுஆராய்ந்துஅங்கீகரித்தது.

நீண்டகாலமாக மனிதனுக்கும் காட்டு யானைகளுக்கும் இடையில் நிலவி வருகின்ற பிரச்சினையைக் குறைப்பதற்கும் தீர்ப்பதற்கும் முன்கூட்டிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனகுழுசிபாரிசுசெய்தது. தேவையான முற்காப்பு செயற்பாடுகளை மேற்கொண்டு செயற்படுத்துவதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தன என்பதையும், ஆனாலும் சட்டமுறையற்ற ரீதியில் மரங்களை வெட்டி அகற்றுதல், பயிர்ச் செய்கைக்காக காடுகளையும் யானைகள் நடமாடும் மற்றும் வாழும் இடங்களையும் அழித்தல் முதலியன போன்ற யானைகளின் இயற்கை வசிப்பிடங்களில் மனிதன் முக்கியமாக தலையிகின்ற காரணிகள் இருந்தன எனவும், மனிதனையும் யானைகளையும் பாதுகாப்பதற்கு அதிகளவான உணவு மற்றும் நீர் தேவைகளையும் மற்றும் யானைகள் வசித்து இனப்பெருக்கம் செய்வதற்குத் தேவையான காட்டுப் பகுதிகள் அதாவது வனாந்திரம் போன்ற அவற்றின் இயற்கை வாழ்விடங்களில் (யானைகளின் வசிப்பிடம் - நடமாடும் பிரதேசம்) உணவு, நீர் போன்ற வசதிகளையும் உறுதிசெய்ய வேண்டும் என்பதும்குழுவின்கவனத்திற்குகொண்டுவரப்பட்டது.

முகாம் ஸ்தலங்களினதும் சுற்றுலா விடுதிகளினதும் புனர்நிர்மாணத்திற்கான ஒரு திட்டம் காணப்பட்டது என கௌரவ தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சர் குறிப்பிடதைப்பாராட்டியகுழுஅவரின் எண்ணக்கருவுக்கு இணங்க, வன விலங்குகளைப் பார்வையிடும் பொருட்டு வருகின்றவர்கள் சுற்றுலா விடுதிகளுக்குள் அடைபட்டிருக்கக்கூடாது, ஆனாலும் மரக் குடிசைகள், முகாம் ஸ்தலங்கள் என்பன போன்ற சுற்றாடல்நேய திறந்த வெளிகளில் தங்க வேண்டும் என்பதையும்குழுவலியுறுத்தியது.

முத்துராஜவெல பாதுகாப்பு ஒதுக்கப் பகுதியினுள் சட்டமுறையற்ற விதத்தில் காணிகளை நிரப்பியெடுத்து கட்டிடங்களை நிர்மாணிப்பதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமமென குழு சிபாரிசு செய்ததோடு, பல காலமாக மானிடக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு வந்திருந்த ஹக்கல, அத்திடிய மற்றும் நுவரெலியா ஆகிய வன ஒதுக்கப் பகுதிகளைப் பாதுகாக்க வேண்டுமானால் அந்தப் பகுதிகளில் நிகழும் மானிடச் செயற்பாடுகளைக் குறைக்க வேண்டுமென்பதையும் வலியுறுத்தினார். நீர்கொழும்புக் களப்புப் பகுதி இயற்கைச் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் குழு சிபாரிசு செய்தது.

**உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு**

| **உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு** **ரூ.'000** | 2013 | 2014 மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 567,395 | 803,540 | 763,050 |
| மீண்டெழும் செலவினம் | 436,397 | 672,800 | 667,150 |
| மூலதனச் செலவினம் | 130,999 | 130,740 | 95,900 |
| **181 - உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சர்** | | | |
| மொத்தச் செலவினம் | 337,553 | 530,340 | 465,950 |
| மீண்டெழும் செலவினம் | 240,007 | 424,200 | 410,550 |
| மூலதனச் செலவினம் | 97,545 | 106,140 | 55,400 |
| **328 – மனித வலுவளைவாய்ப்புத் திணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 229,842 | 273,200 | 297,100 |
| மீண்டெழும் செலவினம் | 196,389 | 248,600 | 256,600 |
| மூலதனச் செலவினம் | 33,453 | 24,600 | 40,500 |

குழு, உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சின் 181, 328 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்துஅங்கீகரித்தது.

குறிப்பாக அரசாங்க ஊழியர்களுக்கு மத்தியில் பல துறைகளிலும் உற்பத்தித்திறனை

அளவிடுவதற்கான ஒரு பொறிமுறைத்திட்டத்தை ஏற்படுத்துவதற்கான அவசியத்தை குழு வலியுறுத்தியதுடன்அடிப்படை ரீதியில் மக்களுக்கு நன்மையளிக்கும் பொருட்டு, செலவு செய்யப்படும் பணம் தொடர்பான விளைபயனில் சாதனைகளை அளவிடுவதற்கான ஒரு முறைமை கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்பதை குழு வலியுறுத்தினார். புதிதாக ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரி அலுவர்களின் உற்பத்தித்திறனை அளவிடுவதற்கான நடவடிக்கைகளை தேசிய உற்பத்தித்திறன் செயலகம் மேற்கொள்ள வேண்டும் என்பதையும்குழுசிபாரிசுசெய்தது.

**சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு**

| **சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு** | 2013 | 2014 மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 747,801 | 1,031,439 | 1,030,392 |
| மீண்டெழும் செலவினம் | 442,907 | 544,187 | 550,342 |
| மூலதனச் செலவினம் | 304,895 | 487,252 | 480,050 |
| **180 - சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு** | | | |
| மொத்தச் செலவினம் | 176,748 | 247,047 | 201,982 |
| மீண்டெழும் செலவினம் | 116,777 | 140,445 | 145,032 |
| மூலதனச் செலவினம் | 59,971 | 106,602 | 56,950 |
| **289 – விவசாய ஏற்றுமதி திணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 571,053 | 784,392 | 828,410 |
| மீண்டெழும் செலவினம் | 326,129 | 403,742 | 405,310 |
| மூலதனச் செலவினம் | 244,923 | 380,650 | 423,100 |

சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சின் 180 மற்றும் 289 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான நகல் மதிப்பீடுகளை குழுஆராய்து அங்கீகரித்தது.

25, 000 ஏக்கர் மரமுந்திரகை பயிர்ச்செய்கை காணிகளில் 19,000 ஏக்கர் காணிகள் அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதையும் 2,000 ஏக்கர் காணிகள் தனியாளர்களினால் பயிர்செய்யப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய காணிகளில் பயிர்செய்யவதற்கு இலங்கை மரமுந்திரகை சபை நடவடிக்கை எடுத்துள்ளளதையும் குழு அவதானித்தது.

மிளகு உற்பத்தியின் ஏற்ற இறக்கத்திற்கு மோசமான காலநிலை, பூச்சிகள் மற்றும் நோய்கள்தான் காரணமாகமென்றும் இருந்தபோதிலும்தொடர்ச்சியான ஆய்வுகளின் மூலம் இவற்றின் தாக்கத்தை குறைப்பதற்கு திணைக்களத்தினால் முடிந்துள்ளதையும் அவதானித்தகுழு வீட்டுப் பயிர்ச்செயகைத் திட்டத்தின் கீழ் பயிரிடுவதற்காக மஹவெளி பகுதி விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக பத்பத்தாயிரம் காசினியா தாவரங்ளை வழங்கப்படவேண்டும்என்பதையும்விதந்துரைத்தது.

எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக் திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ள நிதி போதுமானதல்வென்பதை அவதானித்தகுழு அமைச்சரின் செயற்றிட்டத்தையும் முயற்சிளையும் பாராட்டிய குழு அமைச்சின் அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான நிதியினை அடுத்த வருட வரவுசெலவுத்திட்டத்தில் வழங்குமாறு திறைசேரிக்குசிபாரிசுசெய்தது.

**தெங்கு அபிவிருத்தி, மக்கள்தோட்ட அபிவிருத்தி அமைச்சு** ரூ.'000

| தெங்கு அபிவிருத்தி, மக்கள்தோட்ட அபிவிருத்தி அமைச்சு | 2013 | 2014 மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 1,358,579 | 1,941,654 | 1,895,000 |
| மீண்டெழும் செலவினம் | 663,638 | 952,105 | 977,000 |
| மூலதனச் செலவினம் | 694,942 | 989,549 | 918,000 |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| **178 - தெங்கு அபிவிருத்தி, மக்கள்தோட்ட அபிவிருத்தி அமைச்சர்** | | | |
| மொத்தச் செலவினம் | *1,358,579* | *1,941,654* | *1,895,000* |
| மீண்டெழும் செலவினம் | *663,638* | *952,105* | *977,000* |
| மூலதனச் செலவினம் | *694,942* | *989,549* | *918,000* |

தெங்கு அபிவிருத்தி, மக்கள்தோட்ட அபிவிருத்தி அமைச்சின் 178 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை குழுஆராய்து அங்கீகரித்தது.

வ/ப சிலாபம் பெருந்தோட்ட (தனியார்) கம்பனியில் நூண்ட காலமாக நிலவிய வெற்றிடங்களை நிரப்புவற்கானதவையான நடவடிக்க்கள் எடுக்கப்பட்டுள்ளதை புழு அவதானித்த்து.

தென்னம் பிள்ளைகளை பூச்சிகள் மற்றும் ஏனைய விலங்கினங்கள் என்பவற்றின் தாக்கங்களிலிருந்து பாதுகாப்பதற்கும், அதிக விளைச்சலைத் தரக்கூடிய ஒரு புதிய தென்னை இனத்தை அறிமுகப்படுத்துவதற்குமான பரிகார படிமுறைகளைச் செயற்படுத்துவதற்கு எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள் மற்றும் ஒரு வர்த்தக உற்பத்தி நடவடிக்கையிலுள்ள தென்னம் நீர், தென்னம் சிரட்டை, தென்னம் தும்பு போன்ற தென்னை மைய மூலப்பொருட்களைப் பாதுகாப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைளை குழு பாராட்டியது.

சந்தையில் கிடைக்கக்கூடிய பசளையின் தரம் அடிக்கடி தென்னை ஆராச்சி நிறுவகத்தினால் அல்லது தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென குழு பரிந்தறைத்த்து.

### அரச வளங்கள் பொதுமுயற்சி அபிவிருத்தி அமைச்சு

| **அரச வளங்கள் பொதுமுயற்சி அபிவிருத்தி அமைச்சு** | 2013 | 2014<br>மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015<br>மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 778,995 | 474,642 | 257,400 |
| மீண்டெழும் செலவினம் | 84,190 | 93,480 | 93,400 |
| மூலதனச் செலவினம் | 694,805 | 381,162 | 164,000 |
| **175 - அரச வளங்கள்பொதுமுயற்சி அபிவிருத்தி அமைச்சர்** | | | |
| மொத்தச் செலவினம் | 778,995 | 474,642 | 257,400 |
| மீண்டெழும் செலவினம் | 84,190 | 93,480 | 93,400 |
| மூலதனச் செலவினம் | 694,805 | 381,162 | 164,000 |

அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் 175 ஆம் இலக்க செலவினத் தலைப்புக்கான மதிப்பீடுகளை குழுஆராய்து அங்கீகரித்தது.

காங்கேசந்துறை சீமெந்துத் தொழிற்சாலையனை பாதுகாப்புப் படையினரிடமிருந்துபெற்று மீள் உற்பத்திக்காக நடவடிக்க எடுக்கப்பட்டதறகாக குழு பாராட்டுத்தெரிவித்த்து. இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மூடப்பட்டிருக்கின்ற எரகம தொழிற்சாலைமீண்டும் ஆரம்பிக்கப்பட்மைக்கும் குழு பாராட்டுத்தெரிவித்த்து.

### சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

| **சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு** | 2013 | 2014<br>மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015<br>மதிப்பீடு |
|---|---|---|---|

| | | |
|---|---|---|
| மொத்தச் செலவினம் | 267,334 | 399,000 |
| மீண்டெழும் செலவினம் | 172,384 | 318,000 |
| மூலதனச் செலவினம் | 94,950 | 81,000 |
| **186 - சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்** | | |
| மொத்தச் செலவினம் | 267,334 | 399,000 |
| மீண்டெழும் செலவினம் | 172,384 | 318,000 |
| மூலதனச் செலவினம் | 94,950 | 81,000 |

சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் 186 ஆம் இலக்க செலவினத் தலைப்புக்கான மதிப்பீடுகளை குழு ஆராய்து அங்கீகரித்தது.

பெலவத்த மற்றும் செவனகல ஆகிய சீனித் தொழிற்சாலைகளில் ஆகக்குறைந்தது 16 மெ.வொ. மின்சக்தியை உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகளைத் தாபித்மைக்கு குழு பாராட்டுத்தெரிவித்தது. உள்நாட்டு சீனி உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் விவசாயிகளுக்கு அதிக வசதிகளை வழங்கியமைக்கும் மற்றும் சீனி இறக்குமதியைக் குறைப்பதற்கு உதவியமைக்கும் குழு பாராட்டுத்தெரிவித்த்து.

அடுத்த ஆண்டில் பொதுவான நோய்களுக்கு ஈடுகொடுக்கக்கூடியதும் அறுவடையை அதிகரிக்கக் கூடியதுமான இளைய வளர்ப்புத் தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் பொருட்டு சீனி ஆராய்ச்சி நிறுவகத்திற்கான வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ லக்ஷமன் செனவிரத்ன கேட்டுக்கொண்டார்.

**தபால் சேவைகள் அமைச்சின்**

| **தபால் சேவைகள் அமைச்சின்** ரூ.'000 | 2013 | 2014 மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 9,202,781 | 9,986,000 | 10,057,400 |
| மீண்டெழும் செலவினம் | 8,850,346 | 9,593,000 | 9,837,400 |
| மூலதனச் செலவினம் | 352,436 | 393,000 | 220,000 |
| **108 - தபால் சேவைகள் அமைச்சர்** | | | |
| மொத்தச் செலவினம் | 217,945 | 359,000 | 126,900 |
திரு ஆர்.எஸ். ஹப்புகஸ்வத்த, பணிப்பாளர் (திட்டமிடல்)
திரு ஜே.வை. பீரிஸ், தலைவர், இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம்
கலாநிதி டப்ளியூ.எம்.ஜி. செனவிரத்ன, இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம்
திரு டப்ளியூ. குலரத்ன, கணக்காளர், இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம்
திரு எஸ்.பி. ஹிதலஆராச்சி, தவிசாளர், தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்
திரு ஆர்.எம். பிரேமதாச, பணிப்பாளர், தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்
திரு டீ.எல். சான் அரோஷா ஜயசிங்க, தவிசாளர், துருசவிய நிதியம்
திருமதி எச்.ஏ.எஸ். குமாரி விமலசூரிய, துருசவிய நிதியம்

ஒத்திவைப்பின் பிரகாரம், குழு கூடியது. குழுவின் தவிசாளர் கௌரவ நிமல் சிறிபால த சில்வா தலைமை தாங்கினார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 135, 293 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை குழு ஆராய்ந்தது.

**பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு**

| **பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு** **ரூ.'000** | 2013 | 2014 Revised Budget | 2015 Estimate |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 2,724,020 | 4,255,360 | 4,616,000 |
| மீண்டெழும் செலவினம் | 1,151,898 | 1,405,360 | 1,416,000 |
| மூலதனச் செலவினம் | 1,572,121 | 2,850,000 | 3,200,000 |
| **135 - பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சர்** | | | |
| மொத்தச் செலவினம் | 1,922,913 | 3,156,560 | 3,278,000 |
| மீண்டெழும் செலவினம் | 954,221 | 1,176,060 | 1,180,000 |
| மூலதனச் செலவினம் | 968,692 | 1,980,500 | 2,098,000 |
| **293 - இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்** | | | |
| மொத்தச் செலவினம் | 801,107 | 1,098,800 | 1,338,000 |
| மீண்டெழும் செலவினம் | 197,677 | 229,300 | 236,000 |
| மூலதனச் செலவினம் | 603,430 | 869,500 | 1,102,000 |

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் கலாநிதி தமித டீ. சொய்ஸா 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கான இலக்குத் திட்டம் ஆகியன தொடர்பான ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

கௌரவ முத்து சிவலிங்கம் அவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், கலாநிதி தமித டீ. சொய்ஸா, தாவரங்களைப் புதிதாக நடுதல் மற்றும் தாவரங்களை மீளிடுதல் ஆகியவற்றுக்காக பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு மானியத்தின் அளவுகள் பற்றி விளக்கமளித்தார். கௌரவ முத்து சிவலிங்கம், சிறுபற்றுநிலங்களின் அபிவிருத்திற்கு அமைச்சு ஆற்றிய சேவைகள் தொடர்பாக தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

பிராந்தியப் பெருந்தோட்டக் கம்பனிகளின் (RPCs) கோல்டென் பங்குதாரர் என்ற ரீதியில் அரசாங்கம் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏன் நடவடிக்கை எடுப்பதில்லை என தவிசாளர் வினவிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், கலாநிதி தமித டீ செய்ஸா, தனியார் உடமைக் கம்பனிகளுடன் செய்து கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (ப.ஒ.) என்பவற்றின் பிரகாரம் அந்த சகல கம்பனிகளிலிருந்தும் அரசாங்கம் குத்தகை வாடகைகளைப் பெற்றது என்றும், சில கம்பனிகளின் மூலம் மாத்திரமே பங்குலாபங்கள் செலுத்தப்படுகின்றன என்றும் குறிப்பிட்டார். தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திற்கு சொந்தக் கம்பனிகள் தமது இலாபங்களின் ஒரு பாகத்தைப் பங்களிக்கும் வகையில் அவற்றை ஊக்குவிப்பதற்கான பொறிமுறைத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென தவிசாளர் குறிப்பிட்டுக் கூறினார். அத்தகைய கம்பனிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்ககும் ஒரு ‘பெருந்தோட்ட முகாமைத்துவக் கண்காணிப்புப் பிரிவை’அமைச்சு ஏற்கெனவே தாபித்திருந்தது எனவும் மற்றும் இந்த அம்சமும் அந்தப் பிரிவினால் கண்காணிக்கப்படும் எனவும் கௌரவ மஹிந்த சமரசிங்ஹ தெளிவுபடுத்தினார்.

பயிர்ச்செய்கை தவிர்ந்த ஏனைய பிரிவுகளில் அபிவிருத்தி நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் கானி தொடர்பான பிரச்சினைகள் பற்றி தவிசாளர் வினவினார். RPCsகளின் செயற்பாடுகள் குறித்த குத்தகை உடன்படிக்கையின் மூலம் நிருவகிக்கப்படுகின்றன எனவும், அவற்றைத் திருத்துவதற்கு அவசியமாயின் சிபாரிசு செய்வதற்கும் இந்த அனைத்து குத்தகை உடன்படிக்கைகளையும் பரிசீலிப்பதற்குமான ஒரு உப குழு கௌரவ பிரதி அமைச்சரின் தலைமையின் கீழ் தாபிக்கப்பட்டிருந்தது எனவும் கௌரவ மஹிந்த சமரசிங்ஹ தெளிவுபடுத்தினார்.

மீரியாபெத்த சம்பவத்தைப் பற்றிப் பேசும் போது, கௌரவ மஹிந்த சமரசிங்ஹ, பாதிக்கப்பட்ட குடும்பங்களை முடியுமான வரையில் பாதுகாப்பான இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கும் பொருத்தமான காணிகளைக் கண்டு பெற்றுக்கொள்வதற்கும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என கௌரவ மஹிந்த சமரசிங்ஹ குறிப்பிட்டார்.

ஒருசில கம்பனிகள் சட்டமுறையற்ற ரீதியில் கலப்புத் தேயிலையை இறக்குமதி செய்து அதனை ‘சிலோன்’தேயிலையுடன் கலப்படம்செய்து ‘சிலோன் தேயிலை’என்ற பெயரில் விற்பனை செய்கின்றன எனவும், இதன் மூலம் ‘சிலோன்’தேயிலையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படலாம் எனவும் கூறி கௌரவ ஜோன் அமரதுங்க அவர்களினால் எழுப்பப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், கௌரவ மஹிந்த சமரசிங்ஹ, ‘க்றீன்’தேயிலை போன்ற விஷேட தேயிலையை மாத்திரம் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது எனவும், அவ்வாறான ஏதாவது முறைப்பாடுகளிருப்பின் அந்த முறைப்பாடுகள் ஆராயப்படும் எனவும் குறிப்பிட்டார். டுபாய் விமான நிலையத்தில் ஒரு கம்பனியின் மூலம் தரம் குறைந்த தேயிலை விற்பனை செய்யப்படுவது பற்றி கௌரவ ஜானக பண்டார அவர்கள் மூலம் எழுப்பப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், டுபாய் விமான நிலையத்தில் நிலைகொள்ளச்செய்யப்பட்டுள்ள தேயிலை ஊக்குவிப்பு உத்தியோகத்தர்களினூடாக இந்த நிலைமை கட்டுப்படுத்தப்பட்டிருந்தது என கௌரவ அமைச்சர் குறிப்பிட்டார்.

களுத்துறை மாவட்டத்தில் எண்ணெய்ப் பனை பயிர்ச்செய்கையின் சுற்றாடல் தாக்கம் தொடர்பில் கௌரவ ஜானக பண்டார அவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், கௌரவ மஹிந்த சமரசிங்ஹ, ஒரு கவனமான புலனாய்வின் பின்னர், தென்னை ஆராய்ச்சி நிறுவகம் எண்ணெய்ப் பனைப் பயிர்ச்செய்கை மூலம் கடுமையான தாக்கம் ஏற்படுவதாகவில்லையென உறுதிசெய்திருந்ததாக குறிப்பிட்டார்.

குழு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் 135, 293 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை அங்கீகரித்தது.

**தேசிய மரபுரிமைகள் அமைச்சு**

**சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**

கலாநிதி (திருமதி) நந்தா விக்ரமசிங்க, செயலாளர், தேசிய மரபுரிமைகள் அமைச்சு
திரு பெர்னாட் வசந்த, மேலதிகச் செயலாளர் (நிருவாகம்)
திரு டீ.எம். செனரத் பண்டார, பணிப்பாளர் நாயகம் (தொல்பொருள்)
கலாநிதி (திருமதி) சி.எஸ். வெத்தசிங்க, பணிப்பாளர்
திரு யூ.கே. பண்டார, சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்)
திருமதி சனூஜா கஸ்தூரிஆராச்சி, பணிப்பாளர், தேசிய நூதனசாலைகள் திணைக்களம்
திரு பராக்கிராம தஹநாயக்க, தலைவர், காலி மரபுரிமை மன்றம்
திரு எல்.எச். திலக்கரத்ன, பணிப்பாளர், ஜனகலா கேந்திர நிலையம்
திரு நந்த குமார், சிரேஷ்ட உதவிச் செயலாளர் (அபிவிருத்தி)
திருமதி எம்.ரீ.எஸ்.எஸ். பியதிஸ்ஸ, பிரதான கணக்காளர்
திரு எல்.எச். குணவர்தன, பிரதான நிருவாக உத்தியோகத்தர்
திரு பீ.ஆர்.எம்.எம்.பி.பீ. ரத்நாயக்க, பதில் மேலதிகப் பணிப்பாளர் நாயகம்
திரு ஆர்.ஏ.எம். லக்ஷமன், பணிப்பாளர் (நிதி)
திரு ஆர்.எல்.ஆர். ஜயசேக்கர, உதவிப் பணிப்பாளர் (நிதி)
திரு ஏ.எஸ்.டீ. அளுத்கே, உதவிப் பணிப்பாளர் (நிதி)
திருமதி எஸ்.எஸ்.கே. எல்லாவெல, உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)
திரு ரீ.டீ.என். பெர்னாந்து, உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)
திரு ஏ.கே.பி.கே. ஜயசிறி, கணக்கு உத்தியோகத்தர்

குழு, தேசிய மரபுரிமைகள் அமைச்சின் 142, 207-209 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்தது.

*ரூ'000*

| **தேசிய மரபுரிமைகள் அமைச்சிசு** ரூ. '000 | 2013 | 2014 மீள் வரவுசெலவுத்திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 1,187,789 | 1,570,762 | 1,640,000 |
| மீண்டெழும் செலவினம் | 853,678 | 1,029,687 | 1,090,000 |
| மூலதனச் செலவினம் | 334,111 | 541,075 | 550,000 |
| 142 - தேசிய மரபுரிமைகள் அமைச்சர் | | | |
| மொத்தச் செலவினம் | 195,973 | 329,620 | 306,500 |
| மீண்டெழும் செலவினம் | 98,654 | 161,060 | 162,550 |
| மூலதனச் செலவினம் | 97,320 | 168,520 | 143,950 |
| 207-தொலபொருளியல் திணைக்களம் | | | |
| மொத்தச் செலவினம் | 695,646 | 817,950 | 775,500 |
| மீண்டெழும் செலவினம் | 571,681 | 649,660 | 689,500 |
| மூலதனச் செலவினம் | 123,965 | 168,290 | 86,000 |
| 208 –தேசிய நூதன சலைகள் திணைக்களம் | | | |
| மொத்தச் செலவினம் | 151,218 | 252,245 | 282,296 |
| மீண்டெழும் செலவினம் | 105,923 | 125,195 | 138,646 |
| மூலதனச் செலவினம் | 45,296 | 127,050 | 143,650 |
| 209 –தேசிய ஹவடிக் கூடத் திணைக்களம் | | | |
| மொத்தச் செலவினம் | 144,951 | 170,047 | 275,704 |
| மீண்டெழும் செலவினம் | 77,421 | 93,772 | 99,304 |
| மூலதனச் செலவினம் | 67,531 | 77,175 | 176,400 |

தேசிய மரபுரிமைகள் அமைச்சின் செயலளர் கலாநிதி (திருமதி) நந்தா விக்ரமசிங்க, அமைச்சின் தூரநோக்கு மற்றும் செயற்பணி என்பன தொடர்பில் ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்து, தொல்பொருள் பற்றிய ஆய்வுகள் மற்றும் பாதுகாப்பு, நூதனசாலைகள் மற்றும் மரபுரிமைகள் பற்றிய கண்காட்சி, சுதேசிய குடியிருப்பார்கள் மீள்தாபிப்பு மற்றும் அபிவிருத்தி, கிராமியக் கலை மற்றும் கலாசார மரபுரிமை, மற்றும் 2014 ஆம் ஆண்டில் அடைந்த சாதனைகள், 2015 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றின் கீழுள்ள முன்னேற்றம் பற்றி சுருக்கமாக விளக்கமளித்தார்.

தொல்பொருள் ஆய்வு ஆராய்ச்சி நடவடிக்கைகளில் இலங்கை இராணுவப் படையினரும் மற்றும் இலங்கைப் பொலிஸ் படையினரும் நல்கிய உதவி ஒத்தாசைகளை கௌரவ (வண.) எல்லாவல மேதானந்த தேரர் பராட்டினார். கிழக்கு மாகாணத்திலுள்ள 'தீகவாவி தூபியை', அது புத்த பெருமானின் புனித தந்தத்தைக் கொண்டமைந்துள்ள ஒரேயொரு பௌத்த ஆலயம் என்பதால், அந்த ஆலயத்தைப் புனரமைத்து பக்தர்களின் வணக்கவழிபாடுகளுக்கு திறந்து வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

100 வருடங்களுக்கும் மேற்பட்ட கால பழமை வாய்ந்த சகல கட்டிடங்களையும் பராமரித்துப் பாதுகாப்பது என்பது தேசிய மரபுரிமைகள் அமைச்சுக்கு சாத்தியமாகவோ அல்லது செயல்முறையானதாகவோ இருக்க மாட்டாது என்பதை சட்டிக்காட்டிய கௌரவ தவிசாளர், அத்தகைய கட்டிடங்கள் பராமரிக்கப்பட்டு பொது நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுமாயின், அது மிகவும் பொருத்தமானதாக அமையும் எனவும், அதே நேரம், அதனால் இவற்றின் வெளித்தோற்றங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டார். இந்த விடயத்தைக் கருத்திற்கொள்ளும் பொருட்டு தேசிய மரபுரிமை வனவிலங்கு பகுதிகள் தொடர்பான சட்டமூலத்திற்கு திருத்தங்களை மேற்கொள்ளும் வகையிலும் மற்றும் மிகவும் செயல்முறை சாத்தியமான ஒரு அணுகுமுறையைப் பின்பற்றுவதற்கான ஏதாவது தேவையான திருத்தங்கள் இருக்கமாயின் அவற்றை உள்ளடக்கி பொருத்தமான சிபாரிசுகளை முன்வைக்கும் வகையிலும் தேசிய மரபுரிமை பற்றிய ஆலோசனைக் குழுவின் கீழ் ஒரு உப குழுவை நியமிப்பதற்கு கௌரவ தவிசாளர் அவர்களும் மற்றும் கௌரவ மஹிந்த சமரசிங்ஹ தமது யோசனைகளை முன்வைத்தனர். தொல்பொருள் பெறுமதிமிக்க கட்டிடங்களைப் பேணிப் பராமரித்துப் பாதுகாப்பது பற்றிய ஒரு குழுவை நியமிப்பதற்கு ஏற்கெனவே நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அமைச்சுக்கான செயலாளர் குறிப்பிட்டார். தொல்பொருள் திணைக்களத்தில் சிரேஷ்ட பதவிகளில் பல வெற்றிடங்கள் நிலவுகின்றமையை கௌரவ ஜானக பண்டார அவர்கள் சுட்டியதுடன், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்கள். கலாநிதி (திருமதி) நந்தா விக்ரமசிங்க, தேவையான தகைமைகளையுடைய ஊழியர்களை ஈர்ப்பதற்கு சம்பளங்கள் போதியளவில் காணப்படவில்லை என தெளிவுபடுத்திக் கூறினார். ஏற்கெனவே நிலவுகின்ற வெற்றிடங்களை முன்கூட்டியே நிரப்பக்கூடிய வகையில், ஆட்சேர்ப்புத் திட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஒரு அமைச்சரவை விஞ்ஞாபனப் பத்திரத்தை சமர்பிக்குமாறு குழு சிபாரிசு செய்தது.

குழு, தேசிய மரபுரிமைகள் அமைச்சின் 142, 207, 208 மற்றும் 209 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை அங்கீகரித்தது.

கூட்டம், பி.3.30 மணியளவில், 2014 ஆம் ஆண்டு நவெம்பர் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

ஒப்பம்:நீல் இத்தவெல
குழுவுக்கான செயலாளர்

**2015 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவினத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான தெரிகுழுவின் நான்காவது கூட்ட அறிக்கை**

2014 ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணி

**சமூகமளித்தோர்:**

கௌரவ அதாவுத செனெவிரத்ன

கௌரவ லசந்த அலகியவன்ன
கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா
கௌரவ ஜோன் அமரதுங்க
கௌரவ ஜானகபண்டார

திரு. நீல் இத்தவெல, பிரதிச்செயலாளர் நாயகமும் குழுச் செயலாளரும்

**சமூகமளித்திருந்த அமைச்சர்கள்:**

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க, கலாசார, கலை அலுவல்கள்அமைச்சர்

**<u>பொதுத் திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:</u>**

திருமதி அனோமா நந்தனி, மேலதிகப் பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
திரு வை. பி. சுமனாவத்தி, மேலதிகப் பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
திருமதி சி. சேனாநாயக்க, பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
திருமதி நாலனி அமரதுங்க, பணிப்பாளர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

திருமதி ஹிரன்ஷா களுதந்திரி, பதில் பணிப்பாளர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

ஒத்திவைப்பு அறிவித்தலுக்கேற்ப குழு கூடியது. தவிசாளர் பாராளுமன்றத்தில் முக்கிய விடயத்தைக் கவனிக்க வேண்டியருந்த காரணத்தினால் அவரால் கூட்டத்திற்குச் சமூகமளிக்க முடியவில்லை. ஆதலால் கௌரவ ஜோன் அமரதுங்க அவர்களை கூட்டத்திற்குத் தலைமை தாங்குமாறு கௌரவ ஜனக பண்டார முன்மொழிய அதனை கௌரவ லசந்த அலகியவன்ன வழிமொழிந்தார்.

**கலாசார, கலை அலுவல்கள்அமைச்சு**

**<u>சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:</u>**

திரு வசந்த ஏக்கநாயக்க, செயலளர்
திரு எஸ்.எம்.ஜி.எம். தர்மசேன, மேலதிகச் செயலாளர்
திருமதி எச்.டீ.எஸ். மல்காந்தி, மேலதிகச் செயலாளர்
திருமதி ஆர்.எம்.எம். ரத்நாயக்க, பிரதான கணக்காளர்
திருமதி கே.டப்ளியூ.எஸ்.பீ. அதுகோரள, பணிப்பாளர் (திட்டமிடல்)
திருமதி தரனி அனோஜா கமகே, சிரேஷ்ட உதவிச் செயலாளர்
திருமதி டப்ளியூ. சுனீதா குரே, சிரேஷ்ட உதவிச் செயலாளர்
திரு கே.கே.ஜி. சிசிர குமார, பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்
திரு விஜித்த கனுக்கல, பணிப்பாளர், கலாசாரத் திணைக்களம்
ரோசிரியர் திரு காமினி அதிகாரி, பணிப்பாளர், மத்திய கலாசார நிதியம்
திரு காமினி சுமனசேக்கர, தலைவர், பொது அவைக்காற்றுகைச் சபை
திரு டக்ளஸ் ஸ்ரீவர்த்தன, பணிப்பாளர், டவர் மண்டப அரங்க நிதியம்
சிரேஷ்ட பேராசிரியர் திரு முதியன்சே திஸாநாயக்க, தலைவர், இலங்கைக் கலைக் கழகம்
திரு கே.டீ. காரியகரவண, கணக்காளர், கலாசாரத் திணைக்களம்
செல்வி பி.சி. பீரிஸ், பணிப்பாளர் (நிதி), மத்திய கலாசார நிதியம்
திருமதி கே.டீ.எஸ்.எஸ். லலந்தி, கணக்காளர், மத்திய கலாசார நிதியம்
திரு ரவிபந்து வித்யாபதி, ஆலோசகர், கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு
திரு ஐ.ஜே. பரணகமகே, உதவிப் பணிப்பாளர் (நிதி), டவர் மண்டப அரங்க நிதியம்

குழு கலாசார, கலை அலுவல்கள்அமைச்சின் 177, 206 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்தது.

*ரூ'000*

| கலாசார, கலை அலுவல்கள் அமைச்சு | 2013 | 2014 மீள் வரவுசெலவுத்திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 1,377,530 | 1,913,690 | 2,650,000 |
| மீண்டெழும் செலவினம் | 82,647 | 1,064,04 | 1,150,000 |
| மூலதனச் செலவினம் | 514,883 | 849,250 | 1,500,000 |
| **177 - கலாசார, கலை அலுவல்கள் அமைச்சர்** | | | |
| மொத்தச் செலவினம் | 1,036,221 | 1,322,340 | 1,915,985 |
| மீண்டெழும் செலவினம் | 562,537 | 658,640 | 711,985 |
| மூலதனச் செலவினம் | 473,684 | 663,700 | 1,204,000 |
| 206 – கலாசாரஅலுவல்கள் திணைக்களம் | | | |
| மொத்தச் செலவினம் | 341,309 | 591,350 | 734,015 |
| மீண்டெழும் செலவினம் | 300,110 | 405,800 | 438,015 |
| மூலதனச் செலவினம் | 41,199 | 55,550 | 296,000 |

கலாசார, கலை அலுவல்கள்அமைச்சின் செயலாளர் திரு வசந்த ஏக்கநாயக்க 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கான இலக்குத் திட்டம் ஆகியன தொடர்பான ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

கௌரவ ஜோன் அமரதுங்க, கலாசார அலுவல்கள் திணைக்களத்திலுள்ள வெற்றிடங்களை மீளநிரப்புவது தொடர்பாக எழுப்பிய ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில், அமைச்சுக்கான செயலாளர், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் (அ.உ.) சம்பந்தமான ஒரு வழக்கு விசாரிக்கப்பட்டு வருவதால் உதவி கலாசார ஊக்குவிப்பு உத்தியோகத்தர் ஆளணியில் நிலவும் வெற்றிடங்கள் தவிர, ஏனைய சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன எனக் குறிப்பிட்டார். சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவினால் அறிமுக்கப்படுத்தப்பட்ட சம்பளக் கட்டமைப்புகளில் காணப்படுகின்ற மாற்றங்களின் காரணமாக அதிகமான நிறுவனங்களில் இதே நிலைமை ஏற்பட்டிருந்தது என கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா சுட்டிக்காட்டியதுடன், அந்தச் சம்பளக் கட்டமைப்புகளிலுள்ள இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்கூட்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

2014 ஆம் ஆண்டிற்கான மூலதன ஒதுக்கீடுகளில் எஞ்சியிருக்கின்ற 1700 மில்லியன் ரூபா நிலுவை பற்றி கௌரவ லசந்த அலகியவன்ன வினவினார். வெளிநாட்டு மானியங்களின் கீழ் கண்டி மற்றும் அனுராதபுரம் ஆகிய இடங்களில் நிர்மாணிப்பதற்கென உத்தேசிக்கப்பட்ட கலை அரங்குகளின் நிர்மாணம் தொடர்பில் 1500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்ததது என்றும், ஆனால், 2015 ஆம் ஆண்டில் உள்நாட்டு நிதிகளைக் கொண்டு மேற்கொள்வதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கேற்ப, அந்த நிதிகள் செலவு செய்யப்படவில்லை என்றும், 2014 ஆம் ஆண்டிற்காக செலுத்தித்தீர்க்கப்படாத செலவுகளுக்கு அந்த நிதிகள் செலவிடப்படும் என்றும் அமைச்சுக்கான மேலதிகச் செயலாளர் தெளிவுபடுத்தினார்.

டவர் மண்டப திரை அரங்கு மற்றும் ஜோன் த சில்வா ஞாபகார்த்த திரை அரங்கு என்பவற்றிலுள்ள புனர்நிர்மாணப் பணி தொடர்பாக கௌரவ ஜோசப் மைக்கல் பெரேரா எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில், அமைச்சுக்கான செயலாளர், தொழில்நுட்பப் பிரச்சினைகளின் காரணமாக, சகல நவீன வசதிகளுடன் கூடிய புதிய ஒரு திரைப்படக்கூடக மண்டபம் ஜோன் த சில்வா ஞாபகார்த்தத் திரை அரங்கின் பெறுமானத்தில் நிர்மாணிக்கப்படும் என நிலைமையை தெளிவுபடுத்திக் கூறினார்.

குழு கலாசார, கலை அலுவல்கள்அமைச்சின் 177, 206 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை அங்கீகரித்து.

**மு.ப. 11.00 மணி**

**<u>சமூகமளித்தோர்:</u>**

கௌரவ அதாவுத செனெவிரத்ன
கௌரவ லசந்த அலகியவன்ன
கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா
கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ பொன். செல்வராசா
கௌரவ ஜானகபண்டார

திரு. நீல் இத்தவெல, பிரதிச்செயலாளர் நாயகமும் குழுச் செயலாளரும்

**<u>சமூகமளித்திருந்த அமைச்சர்கள்:</u>**

கௌரவ வாசுதேவ நாணாயக்கார, தேசிய மொழிகள், சமூகஒருமைப்பாட்டு அமைச்சர்

கௌரவ பழனி திகாம்பரம், தேசிய மொழிகள், சமூகஒருமைப்பாட்டுப் பிரதிஅமைச்சர்

**<u>சமூகமளித்திருந்த ஏனைய உறுப்பினர்கள்:</u>**

கௌரவ ரஊப் ஹகீம்
கௌரவ அஜித் குமார

**<u>திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:</u>**

திருமதி அனோமா நந்தனி, சிரேஷ்ட உதவிச் செயலாளர், அரசாங்க கணக்குகள் திணைக்களம்
திருமதி வை.பி. சுமனாவத்தி, பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
திரு சி. சேனாநாயக்க பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
திருமதி நிலானி அமரதுங்க, பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
திருமதி ஹிரன்ஷா கஞதந்திரி, பதில் பணிப்பாளர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

ஒத்திவைப்பு அறிவித்தலுக்கேற்ப குழு கூடியது. தவிசாளர் பாராளுமன்றத்தில் முக்கிய விடயத்தைக் கவனிக்க வேண்டியருந்த காரணத்தினால் அவரால் கூட்டத்திற்குச் சமூகமளிக்க முடியவில்லை. ஆதலால் கௌரவ அதாவுத செனெவிரத்னஅவர்களை கூட்டத்திற்குத் தலைமை தாங்குமாறு கௌரவ ஜோன் அமரதுங்கமுன்மொழிய அதனை கௌரவ லசந்த அழகியவன்ன வழிமொழிந்தார்.

**தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு**

**<u>சமூகமளித்திருந்த உத்தயோகத்தர்கள்:</u>**

திருமதி எம்.எஸ். விக்ரமசிங்க, செயலாளர், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு
திரு எஸ். பாஸ்கரன், மேலதிகச் செயலாளர் (நிருவாகம்), தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு
திரு எச். ஹேவகே, மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி), தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு
திரு எஸ்.எல்.எம். ஹசீம், சிரேஷ்ட உதவிச் செயலாளர் (சமூக ஒருங்கிணைப்பு)
திரு எம்.கே. முகையிஸ், (மொழிகள்), சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்)
திரு டீ.கே.எம்.ஆர். குமாரசிறி, பிரதான கணக்காளர், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு
திருமதி பி.எம். சுதர்ஷனி, பணிப்பாளர் (திட்டமிடல்), தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு
திரு கே.ஏ. சமந்த, கணக்காளர், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு
டப்ளியூ.ஏ. அல்விஸ், உள்ளகக் கணக்காய்வாளர், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு
திரு ஜே.டீ.சி. ஜயசிங்க, ஆணையாளர், அரச கரும மொழிகள் திணைக்களம்
திரு நிமல் ஆர். ரணவக்க, தலைவர், அரச மொழிகள் ஆணைக்குழு
திரு நிகால் ஹேரத், தலைவர், மொழிக் கல்வி மற்றும் பயிற்சிக்கான தேசிய நிறுவகம் (NILET)
திரு பிரசாத் ஆர். ஹேரத், பணிப்பாளர் நாயகம், மொழிக் கல்வி மற்றும் பயிற்சிக்கான தேசிய நிறுவகம் (NILET)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டுஅமைச்சின் 134, 236 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை குழு ஆராய்ந்தது.

*ரூபா'000*

| தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 2013 | 2014 மீள் வரவுசெலவுத்திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 416,467 | 576,250 | 707,800 |
| மீண்டெழும் செலவினம் | 256,707 | 314,550 | 357,800 |
| மூலதனச் செலவினம் | 159,760 | 261,700 | 350,000 |
| 134 - தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டுஅமைச்சு | | | |
| மொத்தச் செலவினம் | 330,723 | 473,090 | 588,250 |
| மீண்டெழும் செலவினம் | 193,988 | 242,840 | 279,350 |
| மூலதனச் செலவினம் | 136,735 | 230,250 | 308,900 |
| 236 – அரச கரும்மொழிகள் திணைக்களம் | | | |
| மொத்தச் செலவினம் | 85,744 | 103,160 | 119,550 |
| மீண்டெழும் செலவினம் | 62,719 | 71,710 | 78,450 |
| மூலதனச் செலவினம் | 23,025 | 31,450 | 41,100 |

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் திருமதி எம்.எஸ். விக்ரமசிங்க 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கான இலக்குத் திட்டம் ஆகியன தொடர்பான ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

ஜோன் அமரதுங்கஅவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், திருமதி எம்.எஸ். விக்ரமசிங்க, அமைச்சுக்குப் பொருத்தமான அதிகமான LLRC சிபாரிசுகள் ஏற்கெனவே செயற்படுத்தப்பட்டுள்ளன எனவும், ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதில் சுருக்கமான ஒரு கொள்கையைச் செயற்படுத்துவதற்கான ஒரு 5 ஆண்டு வழிகாட்டல் திட்டம் நகல்செய்யப்பட்டுள்ளது எனவும், மாவட்ட செயலாளர் அலுவலகங்களில் நிலவுகின்ற 200 இற்கும் அதிகமான வெற்றிடங்கள், அந்தச் செயலகங்களின் செயற்பாடுகளை வலுப்படுத்தும் முகமாக முன்கூட்டி நிரப்பப்படும் எனவும், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்துடனான கூட்டொத்துழைப்பில் ஒரு மும்மொழிபெயர்ப்பு மென் பாகத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன எனவும் குறிப்பிட்டார்.

பிரதேச செயலகங்களுக்கான சமூக ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்வதில் பின்பற்றப்பட்ட நடைமுறையின் காரணமாக 205 ஆட்சேர்ப்புகளில், சமூகத் தேவைப்பாடுகளைக் கருத்திற்கொள்ளாது 14 முஸ்லிம்களும் 2 தமிழர்களும் மாத்திரமே ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர் என கௌரவ பழனி திகாம்பரம் சுட்டிக்காட்டினார். அவர்கள் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட ஒரு போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டதால், அமைச்சரவை உப குழுவுக்கு தற்போதைய நடைமுறைகளிலிருந்து விலகிச் செயற்படுவதற்கு நேர்ந்திருந்தது என கௌரவ வாசுதேவ நாணாயக்கார தெரிவித்தார். இந்த விடயத்தை ஆராய்ந்த குழு, அடிப்படை ஆட்சேர்ப்புத் திட்டம் இதனை சரியான முறையில் அடையாளப்படுத்தியிருக்க வேண்டும் என்பதை அவதானித்ததுடன், இந்த நிலையைத் தெளிவுபடுத்தி, அந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தைத் திருத்தியமைக்குமாறு கோரி அமைச்சு, ஒரு விஷேட அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் சிபாரிசு செய்தது.

ஆரம்பக் கல்விப் பாடவிதானத்தில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளையும் உள்ளடக்க வேண்டியதன் அவசியம் பற்றி கௌரவ அதாவுத செனெவிரத்ன மற்றும் கௌரவ அஜித் குமார ஆகிய இருவரும் சுட்டிக்காட்டினார்கள். போதிய விளம்பரங்களை மேற்கொண்டதன் பின்னர், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளினதும் தேர்ச்சித்திறனை எதிர்காலத்தில் அரசாங்க சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் போது, ஒரு கட்டாயத் தேவைப்பாடாக ஆக்கப்படுதல் வேண்டும் என்ற யோசனையை கௌரவ அமைச்சர் முன்வைத்தார்.

கிழக்கு மாகாணத்தில், ஆட்சேர்ப்புகள் நாடளாவிய ரீதியில், இன விகிதாசார அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற என்ற விடயத்தை கௌரவ பொன். செல்வராசா குழுவின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். இதனையடுத்து, கௌரவ வாசுதேவ நாணாயக்கார, உரிய அரசாங்க முகவராண்மைகளுக்கு இந்த விடயத்தை அறியப்படுத்துவதற்கு உடன்பட்டார்.

அரசியலமைப்பை மேற்கோள்காட்டி, கௌரவ அஜித் குமார தேசிய மொழிக் கொள்கைக்கான திருத்தம் ஏதெனும் தெளிவின்மையை ஏற்படுத்தாத வகையில் சுருக்கமான முறையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதை சுட்டிக்காட்டினார். அரசியலமைப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கின்ற தமது சொந்த மொழியைக் கற்பதற்கு சில பல்கலைக்கழகங்களிலுள்ள மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை என்ற

விடயத்தையும் கௌரவ அஜித் குமார மேலும் சுட்டிக்காட்டியதையடுத்து, கௌரவ வாசுதேவ நாணாயக்கார இந்த விடயத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு உடன்பட்டார்.

கௌரவ அஜித் குமாரஅவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், கௌரவ வாசுதேவ நாணாயக்கார, சகல இனக் குழுக்களினதும் பங்குபற்றலைக் கொண்டு இன்றைய சமய கலாசார நிகழ்வுகள் ஒழுக்கப்படும் என அறிவித்தார்.

குழு, தேசிய மொழிகள், சமூகஒருமைப்பாட்டு அமைச்சின் 134, 236 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை அங்கீகரித்தது.

**பி.ப. 1.00 மணி**

***சமூகமளித்தோர்:***
கௌரவ அதாவுத செனெவிரத்ன
கௌரவ ஜோன் அமரதுங்க
கௌரவ பொன். செல்வராசா
கௌரவ ஜானகபண்டார

திரு. நீல் இத்தவெல, பிரதிச்செயலாளர் நாயகமும் குழுச் செயலாளரும்

***சமூகமளித்திருந்த அமைச்சர்கள்:***

கௌரவ குணரத்ன வீரகோன், மீள் குடியேற்ற அமைச்சர்

கௌரவ விநாயகமூரத்தி முரளிதரன், மீள்குடியேற்ற பிரதிஅமைச்சர்

***சமூகமளித்திருந்த ஏனைய உறுப்பினர்கள்:***
கௌரவ பா. அரியநேத்திரன்

***திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:***
திருமதி அனோமா நந்தனி, சிரேஷ்ட உதவிச் செயலாளர், அரசாங்க கணக்குகள் திணைக்களம்
திருமதி வை.பி. சுமனாவத்தி, பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
திரு ரீ.எம்.ஜே. பண்டார, பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
திருமதி பி.எச். சந்திமா, உதவிப் பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்

ஒத்திவைப்பு அறிவித்தலுக்கேற்ப குழு கூடியது. தவிசாளர் பாராளுமன்றத்தில் முக்கிய விடயத்தைக் கவனிக்க வேண்டியருந்த காரணத்தினால் அவரால் கூட்டத்திற்குச் சமூகமளிக்க முடியவில்லை. ஆதலால் கௌரவ அதாவுத செனெவிரத்னஅவர்களை கூட்டத்திற்குத் தலைமை தாங்குமாறு கௌரவ ஜோன் அமரதுங்கமுன்மொழிய அதனை கௌரவ ஜானக பண்டார வழிமொழிந்தார்.

***மீள்குடியேற்ற அமைச்சு***
***<u>சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:</u>***
திரு ஜானக சுகததாச, செயலாளர்
திரு எம்.எம். நயிமுடீன், மேலதிகச் செயலாளர்
திரு ஆர்.டப்ளியூ.கே. பெரேரா, பிரதான கணக்காளர்
திரு ஈ.எம்.டீ.பீ. ஏக்கநாயக்க, பணிப்பாளர் (அபிவிருத்தி)
திரு கே. நிக்கரிகாந், உதவிச் செயலாளர்
திருமதி டீ.எல். தீபானி பிரியங்கா, உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)
திருமதி யூ.டீ.ரீ. ரொட்ரிகோ, உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)
திரு பீ.எச். பஸ்ஸபெரும, தலைவர், மீள்குடியேற்ற அதிகார சபை

குழு, மீள்குடியேற்ற அமைச்சின் 145 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்தது.

*ரூ'000*

| மீள்குடியேற்ற அமைச்சு | 2013 | 2014 மீள் வரவுசெலவுத்திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 486,980 | 403,458 | 378,050 |

| | | | |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 167,878 | 174,605 | 192,000 |
| மூலதனச் செலவினம் | 319,102 | 228,853 | 186,050 |
| 145 - மீள்குடியேற்ற அமைச்சர் | | | |
| மொத்தச் செலவினம் | 486,980 | 403,458 | 378,050 |
| மீண்டெழும் செலவினம் | 167,878 | 174,605 | 192,000 |
| மூலதனச் செலவினம் | 319,102 | 228,853 | 186,050 |

மீள்குடியேற்றஅமைச்சின் செயலாளர் திரு ஜானக சுகததாச 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கான இலக்குத் திட்டம் ஆகியன தொடர்பான முன்னேற்றம் பற்றிய ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்தார். தற்பொழுது 90% மீள்குடியேற்றப் பணி நிறைவடைந்துள்ளதாகவும், 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதியாகும் போது ஏற்கெனவே 228,838 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளன எனவும், இன்னும் 7840 குடும்பங்கள் மாத்திரமே மீள்குடியேற்றப்படவுள்ளன எனவும் அவர் தெளிவுபடுத்திக் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் இது வரை முழுமையாக மீள்குடியேற்றப்படாமை தொடர்பாக கௌரவ பொன். செல்வராசா அவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், இடம்பெயர்ந்த என இனங்காணப்பட்ட 508 குடும்பங்களில் 297 குடும்பங்களுக்கு மீள்குடியேற்றத்திற்கு உதவி வழங்கப்பட்டது என அமைச்சுக்கான செயலாளர் குறிப்பிட்டார். தமக்கு மீள்குடியேற்ற உதவியை வழங்கும் முகமாக தற்பொழுது தனியான ஒரு வரவுசெலவுத்திட்ட நிரல் இல்லையெனவும் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

மாவட்ட செயலகங்களுடன் இணைந்து பணியாற்றியதாகவும், அந்த மாவட்ட செயலகங்களினூடாக நிதி உரிய முறையில் நன்மை பெறுநர்களுக்குக் கிடைக்கச் செய்யப்பட்டதாகவும் அமைச்சுக்கான செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

கௌரவ மீள்குடியேற்ற அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பீடுசெய்து, மேற்குறித்த விடயத்திற்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு 2015-2017 ஆம் ஆண்டிற்கான நடுத்தர கால செலவின வேலைச்சட்டகத்தினுள் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துடன் கலந்துரையாடிய பின்னர் 2015 ஆம் ஆண்டில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

குழு, மீள்குடியேற்ற அமைச்சின் 145 ஆம் இலக்க செலவினத் தலைப்புக்கான மதிப்பீடுகளை அங்கீகரித்தது.

**பொது உறவுகள் மற்றும் பொது விவகாரங்கள் அமைச்சு**

**சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**
திரு எச்.பி. கசியன் ஹேரத், செயலாளர், பொது உறவுகள் மற்றும் பொது விவகாரங்கள் அமைச்சு
திரு எஸ்.ஏ.எம்.எல். குணதிலக்க, மேலதிகச் செயலாளர்
திரு எஸ்.ஏ.என்.ஆர். சுபசிங்க, பிரதான கணக்காளர்
திரு குமாரகே, உள்ளகக் கணக்காய்வாளர்
திருமதி ஜே.சி. விதானகே, முகாமைத்துவ உதவியாளர் (அபிவிருத்தி)
திருமதி எஸ்.ஏ.எஸ்.யூ. சத்தரசிங்க, முகாமைத்துவ உதவியாளர் (நிருவாகம்)
திருமதி பி.எம்.எஸ்.டீ. ஸ்ரீவர்தன, முகாமைத்துவ உதவியாளர்
திருமதி எம்.எம்.எச்.கே. விஜேபண்டார, முகாமைத்துவ உதவியாளர் (அபிவிருத்தி)

குழு, பொது உறவுகள் மற்றும் பொது விவகாரங்கள் அமைச்சின் 183 ஆம் இலக்க செலவினத் தலைப்புக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்தது

| பொது உறவுகள் மற்றும் பொது விவகாரங்கள் அமைச்சு ரூ. '000 | 2013 | 2014 மீள் வரவுசெலவுத்திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 226,297 | 376,700 | 426,830 |
| மீண்டெழும் செலவினம் | 62,407 | 78,700 | 76,830 |
| மூலதனச் செலவினம் | 163,890 | 298,000 | 350,000 |
| 183 - பொது உறவுகள் மற்றும் பொது விவகாரங்கள் அமைச்சர் | | | |

| | | | |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 226,297 | 376,700 | 426,830 |
| மீண்டெழும் செலவினம் | 62,407 | 78,700 | 76,830 |
| மூலதனச் செலவினம் | 163,890 | 298,000 | 350,000 |

பொது உறவுகள் மற்றும் பொது விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் திரு எச்.பி. கசியன் ஹேரத் 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கான இலக்குத் திட்டம் ஆகியன தொடர்பான ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

பொது வாடிவீடுகளின் நிர்மாண முன்னேற்றம் பற்றி கௌரவ ஜோசப் மைக்கல் பெரேரா அவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, பெலன்னறுவை, மிகிந்தலை, கதிர்காமம் மற்றும் மகியங்கனை ஆகிய நகரங்களில் ஆறு வாடிவீடுகளை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது எனவும், இவற்றில் மிகிந்தலை மற்றும் மகியங்கனை ஆகிய வாடிவீடுகளை 2014 ஆம் ஆண்டு முடிவடைய முன்னர் திறந்துவைக்க முடியும் எனவும் திரு ஹேரத் தெளிவுபடுத்தினார். ஒவ்வொரு வாடிவீட்டில் கிடைக்கக் கூடிய வசதிகள் மற்றும் ஒதுக்கீட்டுக் கட்டணங்கள் முதலியன அடங்கலாக வாடிவீடுகளின் ஒரு பட்டியலை பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கச்செய்வதற்காக கௌரவ ஜோசப் மைக்கல் பெரேரா கேட்டுக் கொண்டார். இதனைப் பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சுக்கான செயலாளர் உடன்பட்டார்.

பாசிக்குடா என்ற இடத்தில் ஒரு பொது வாடிவீட்டை நிர்மாணிப்பதற்கு கௌரவ பொன். செல்வராசா முன்மொழிந்தாலும், போதிய நிதிகள் இல்லாத காரணத்தினால் தான் அந்த வேண்டுகோளை நிறைவேற்ற இயலாமையையிட்டு மனம் வருந்தினார்.

2014 ஆம் ஆண்டு கலப்பகுதியில் அமைச்சு நிறைவேற்றிய சமூகப் பணியை கௌரவ ஜோசப் மைக்கல் பெரேரா பாராட்டியதுடன், கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க சமய விவகார நிறுவனங்களுக்கு நிதி உதவியை வழங்கும் நடைமுறை பற்றியும் வினவினார். அங்கீகரிக்கப்பட்ட அரச நியதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க, பிரதேச செயலகங்களினூடாக நிதி விடுவிக்கப்பட்டது என செயலாளர் குறிப்பிட்டார். நிதி, அது பிரதேச செயலகங்களினூடாக வழங்குவதைப் பார்க்கிலும் உரிய பாரிஸ் சங்கத்திற்கு நேரடியாக விடுவிக்கப் படுமாயின் மிகப் பயனுள்ளதாக அமையும் என கௌரவ ஜோசப் மைக்கல் பெரேரா தனது யோசனையை முன்வைத்தார். கௌரவ அமைச்சர், குறித்த அந்த விடயத்தை ஆராய்ந்து பார்க்குமாறு அமைச்சுக்கான செயலாளருக்கு அறிவுறுத்தியதுடன், கிடைக்கும் ஒவ்வொரு கோரிக்கையையும் அமைச்சு பரிசீலனை செய்யும் எனவும், ஒரு மதிப்பாய்வு அறிக்கையை பெற்ற பின்னர் மாத்திரமே கருத்திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன எனவும் குறிப்பிட்டார்.

அமைச்சிலுள்ள தற்காலிக ஊழியர்களை நிரந்தர ஆளணயில் உள்ளீர்க்குமாறு கௌரவ ஜோசப் மைக்கல் பெரேரா முன்மொழிந்ததையடுத்து, அது 2015 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டப் பிரேரணைகளின் கீழ் மேற்கொள்வதற்கு கௌரவ அமைச்சர் உடன்பட்டார்.

குழு, பொது உறவுகள் மற்றும் பொது விவகாரங்கள் அமைச்சின்183 ஆம் இலக்க செலவினத் தலைப்புக்கான மதிப்பீடுகளை அங்கீகரித்தது.

கூட்ட 3.30.பி மணியளவில் 2014ஆம் ஆண்டு நவெம்பர் 08 ஆம் திகதி சனிக்கிழமை மு 10.30 .ப.மணி வரை ஒத்திவைக்கப்பட்டது .

ஒப்பம்: நீல் இத்தவெல
குழுவுக்கான செயலாளர்

## 2015 ஆம்ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டஅமைச்சுக்களின் செலவினத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான தெரிகுழுவின் ஐந்தாவதுகூட்ட அறிக்கை

2014 ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10.30 மணி

**சமூகமளித்தோர்:**

கௌரவ நிமல் சிறிபால த சில்வா (தவிசாளர்)
கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ பொன். செல்வராசா
கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா
கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

திரு. நீல் இத்தவெல, பிரதிச் செயலாளர் நாயகமும் குழுச் செயலாளரும்

**சமூகமளித்திருந்த அமைச்சர்கள்:**

கௌரவ ஜயரத்ன ஹேரத், தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சர்
கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன், தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் பிரதி அமைச்சர்

**சமூகளித்திருந்த ஏனைய உறுப்பினர்கள்:**

கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன
கௌரவ கருப்பையா வேலாயுதம்
கௌரவ நிமல் விஜேசிங்க

**பொதுத் திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**

திரு எஸ்.எஸ். முதலிகே, மேலதிகப் பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்

**தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு**

**சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**

கலாநிதி வில்லி கமகே, செயலளர் தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு
திருமதி சந்திரா விக்ரமசிங்க, மேலதிகச் செயலாளர் (நிருவாகம்), தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு
திரு டப்ளியூ.ஏ.டீ.ஏ. விஜேசூரிய, மேலதிகச் செயலாளர் (தொழில்நுட்பம்), தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு
திரு எஸ். தெனியாவத்த, பிரதான கணக்காளர், தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு
திரு பி.எஸ்.எஸ். விஜேரத்ன, சிரேஷ்ட உதவிச் செயலாளர், தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு
திரு எச்.ஏ.டப்ளியூ. அபேகுமார, பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு
திருமதி எஸ்.ஏ.ஜீ. சூரியமாரி, உதவிப் பணிப்பாளர், தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு
திரு அமில விஜேதுங்க, அபிவிருத்தி உத்தியோகத்தர், தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு
கலாநிதி டீ.எஸ்.ஏ. விஜேசுந்தர, பணிப்பாளர் நாயகம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்
திரு டீ.எச்.பி. பெருமுணகே, பணிப்பாளர் (அபிவிருத்தி), தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்
திருமதி ஐ.டப்ளியூ.எம்.சி.கே. இலங்ககோன், பணிப்பாளர் (நிருவாகம்), தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்
திரு டப்ளியூ.ரீ.யூ. த மெல், பிரதான கணக்காய்வாளர், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்
திரு பி.எம்.ஏ. த சில்வா, பணிப்பாளர், தேசிய விலங்கியல் பூங்காக்கள் திணைக்களம்
திருமதி தம்மிக்கா மல்சிங்க, மேலதிகப் பணிப்பாளர் (திட்டமிடல்), தேசிய விலங்கியல் பூங்காக்கள் திணைக்களம்
திரு எச்.ஓ. தெவ்மித் ரோஹன, மேலதிகப் பணிப்பாளர் (நிருவாகம்), தேசிய விலங்கியல் பூங்காக்கள் திணைக்களம்
திரு பீ.எஸ்.எம். அபேசேக்கர, பிரதான கணக்காளர், தேசிய விலங்கியல் பூங்காக்கள் திணைக்களம்
திரு அனில் கொஸ்வத்த, தவிசாளர், இலங்கைக் கைப்பனிகள் சபை
திருமதி எல்.எம்.ஈ. பெரேரா, பிரதான நிறைவேற்று அலுவலர், இலங்கைக் கைப்பனிகள் சபை
திருமதி எஸ்.ஆர்.எம். பெரேரா, பிரதான நிதி உத்தியோகத்தர், இலங்கைக் கைப்பனிகள் சபை
திரு டப்ளியூ.சி.கே. ஜயவர்த்த, இலங்கைக் கைப்பனிகள் சபை

திரு சி.என். தஹநாயக்க, இலங்கைக் கைப்பனிகள் சபை

ஒத்திவைப்பின் பிரகாரம் குழு கூடியது. தவிசாளர் கௌரவ நிமல் சிறிபால த சில்வா கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

குழு தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சின் 188, 294, 322 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்தது.

*ரூ'000*

| தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சு | 2013 | 2014 மீள் வரவுசெலவுத்திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 1,156,227 | 1,533,508 | 1,510,900 |
| மீண்டெழும் செலவினம் | 380,368 | 505,600 | 515,000 |
| மூலதனச் செலவினம் | 775,859 | 1,027,908 | 995,900 |
| 188 - தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சர் | | | |
| மொத்தச் செலவினம் | | 150,383 | 94,900 |
| மீண்டெழும் செலவினம் | | 64750 | 64,950 |
| மூலதனச் செலவினம் | | 85,633 | 29,950 |
| 294 –தேசிய விளங்குக்காட்சிச் சலைகள் திணைக்களம் | | | |
| மொத்தச் செலவினம் | 523,499 | 725,725 | 808,500 |
| மீண்டெழும் செலவினம் | 172,076 | 208,750 | 211,850 |
| மூலதனச் செலவினம் | 351,424 | 516,975 | 596,650 |
| 322 தேசிய தாவரவியல் திணைக்களம் | | | |
| மொத்தச் செலவினம் | 632,727 | 657,400 | 607,500 |
| மீண்டெழும் செலவினம் | 208,292 | 232,100 | 238,200 |
| மூலதனச் செலவினம் | 424,435 | 425,300 | 369,300 |

பூங்காக்கள் மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சின் கலாநிதி வில்லி கமகே 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கான இலக்குத் திட்டம் ஆகியன தொடர்பான ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

செலவினத் தலைப்புகளில் அதிகளவு சேமிப்புகள் காணப்படுகின்றமை பற்றி கௌரவ தவிசாளர் வினவிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், அந்த ஒப்பந்தத் தரப்புகளினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செலவுப் பட்டியலின் அடிப்படையில் செலவு செய்யப்படவுள்ள நிகழும் கருத்திட்டங்களுக்காக அந்த நிதிகள் ஒதுக்கப்பட்டன என தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சர் கௌரவ ஜயரத்ன ஹேரத் தெளிவுபடுத்தினார். இலங்கையிலுள்ள பொதுப் பொழுதுபோக்கு நிலையங்களையும் சுற்றுலாத் துறையையும் அபிவிருத்தி செய்வதில் தனியார் துறையை ஈடுபடுத்துவதற்காக கௌரவ ஜோன் அமரதுங்க அவர்கள் முன்வைத்த ஒரு யோசனை தொடர்பாக கௌரவ அமைச்சர் பேசும் போது, இந்த விடயத்தை இலகுபடுத்துவதாகவிருந்தால் ஏற்கெனவேயிருக்கின்ற சில நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றை சற்றுத் தளர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார். கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவிஸ்ஸாவெல புதிய ஈர வலயத் தாவரவியல் பூங்காவின் பெயரை 'சீதவாக்கைத் தாவரவியல் பூங்கா'என மாற்றும் வகையில் உடனடி நடவடிக்கையை எடுப்பதற்கு கௌரவ அமைச்சர் உடன்பட்டார்.

கௌரவ ஜோன் அமரதுங்க அவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், கௌரவ அமைச்சர் தெஹிவளையில் அமைந்துள்ள மிருகக் காட்சிசாலையை பிரிதொரு இடத்திற்கு நகர்த்துவதற்கான திட்டம் ஏதுமிருக்கவில்லை எனக் குறிப்பிட்டார். தெஹிவளையில் அமைந்துள்ள மிருகக் காட்சிசாலைக்கு இணைக்கப்பட்ட சகல மிருக வைத்தியர்களும் ஏன் இடமாற்றத்தைக் கோரியிருந்தனர் என கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், அதற்கான காரணம் பதவியணியிலுந்த ஒரு உள்ளக முரண்பாடு எனவும், அந்தப் பிரச்சினை தற்பொழுது தீர்த்துவைக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கௌரவ அமைச்சர் தெரிவித்தார்.

தெஹிவளையில் அமைந்துள்ள மிருகக் காட்சிசாலையின் நீரியியல் உயிரினத் தடாகம்

ஏன் மூடப்பட்டது என கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், ம.பொ.உ.ப. மற்றும் ந.அ.அ.ச. ஆகியவற்றுடன் இணைந்து மிருகக் காட்சிசாலையை அபிவிருத்தி செய்து நவீனப்படுத்தும் நிமித்தம் ஒரு தலைமைத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது எனவும், இந்தத் தலைமைத் திட்டத்தில் அந்த நீரியியல் உயிரினத் தடாகத்தின் அபிவிருத்திப் பணி உள்ளடக்கபடும் எனவும் கௌரவ அமைச்சர் குறிப்பிட்டார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு பொழுதுபோக்கு வசதிகளைப் பெற்றுக்கொடுக்குமாறு கௌரவ கறுப்பையா வேலாயுதம் விடுத்த ஒரு கோரிக்கைக்குப் பதிலளிக்கையில், கௌரவ அமைச்சர், 2015 ஆம் ஆண்டிற்கான வேலைத்திட்டத்தில் அந்த விடயத்தை உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

நீர்கொழும்புக் கடற்கரைப் பிரதேசத்தில் ஒரு ஓய்வுப் பூங்காவைத் தாபிப்பதற்கு கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே முன்மொழிந்தார். இந்த முன்மொழிவை செயற்படுத்துவதற்கு கௌரவ அமைச்சர் உடன்பட்டார்.

தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சின் 188, 294, 322 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை குழு அங்கீகரிக்கப்பட்டது.

**மு.ப. 11.00**
**சமூகமளித்தோர்:**
கௌரவ நிமல் சிறிபால த சில்வா (தவிசாளர்)
கௌரவ ஜோன் அமரதுங்க
கௌரவ பொன். செல்வராசா

திரு. நீல் இத்தவெல, பிரதிச் செயலாளர் நாயகமும் குழுச் செயலாளரும்

**சமூகமளித்திருந்த அமைச்சர்கள்:**

கௌரவ காமினி விஜித் விஜயமுனி சொய்சா, வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சர்

கௌரவ ஜயரத்ன ஹேரத், தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சர்

**சமூகமளித்திருந்த ஏனைய உறுப்பினர்கள்:**
கௌரவ கீதாஞ்ஜன குணவர்தன
கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்
கொளரவ நிமல் விஜேசிங்க
கௌரவ கே. வேலாயுதம்

**திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**
திரு எஸ்.எஸ். முதலிகே, மேலதிகப் பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்
திரு ஏ.எச்.எஸ். குணவர்தன, பணிப்பாளர்,தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
திருமதி சித்தாரா ஜயசேன, பதில் பணிப்பாளர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
திருமதி வை.பி. சுமனாவத்தி, பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்

கௌரவ தவிசாளர் நிமல் சிறிபால த சில்வா கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

**வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சு**

**சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்**
திரு பீ.கே.யூ.ஏ. விக்ரமசிங்க, செயலளர்,வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சு
திரு சமன் பெர்னாந்து, மேலதிகச் செயலாளர், வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சு
திரு எச்.ஏ.வி.பி. ஹப்பன்கம, சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்), வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சு
திருமதி கே.ஆர்.எஸ். பெரேரா, பணிப்பாளர் (பொறியியல்), வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சு
திரு பி.ஈ. விதாணகமகே, பிரதான கணக்காளர், வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சு
திரு ஏ.எம்.பி. அபேசிங்க, பணிப்பாளர் (திட்டமிடல்), வனசீவராசிகள் வளப் பேணுகை

அமைச்சு
திரு எச்.டீ. ரத்நாயக்க, பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு டப்ளியூ.எஸ்.கே. பத்திரத்ன, பணிப்பாளர் (இயக்கச்செயற்பாடு), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு ஜே.பி.என்.சி. ஜயகொடி, பணிப்பாளர் (நிதி), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு பி.ஏ. தாரக பிரசாத், பணிப்பாளர் (சுகாதார முகாமைத்துவம்), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திருஎஸ்.ஆர்.பீ. திஸாநாயக்க, பிரதிப் பணிப்பாளர் (சுற்றுலா மற்றும் முகாமைத்துவம்), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு எம்.ஜி.சி. சூரியபண்டார, பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம்), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திருமதி சாந்தனி வில்ஸன், பிரதிப் பணிப்பாளர் (மேல் மாகாணம்), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு யூ.எல். தௌபிக், உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் பயிற்சி), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திருமதி எஸ்.டப்ளியூ. சித்ரா ரோஹினி, உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு ஐ.எச்.எஸ்.கே.டீ. த சில்வா, உதவிப் பணிப்பாளர் (ஊவா மாகாணம்), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு ஏ. சுமனசேன, உதவிப் பணிப்பாளர் (வடமேல் மாகாணம்), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு எம்.எச். சித்ரசேன, உதவிப் பணிப்பாளர் (மத்திய மாகாணம்), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு டப்ளியூ.எஸ். வேரகம, உதவிப் பணிப்பாளர் (அனுராதபுரம்), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு பீ.எம். வீரசிங்க, உதவிப் பணிப்பாளர் (கிழக்கு மாகாணம்), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு பி.எல். விமலதாச, உதவிப் பணிப்பாளர் (தென் மாகாணம்), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு ஏ.டப்ளியூ. ராஜபக்ஷ, உதவிப் பணிப்பாளர் (தென் மாகாணம்), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு கே.ஜி.எஸ். வீரசிங்க, உதவிப் பணிப்பாளர் (வவுனியா), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு டப்ளியூ.ஏ. லலித் குமார, உதவிப் பணிப்பாளர் (திருகோணமலை), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு டப்ளியூ.டீ.எம்.ஜே. விகரமசிங்க, உதவிப் பணிப்பாளர் (பொலன்னறுவை), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு டப்ளியூ.பி.ஏ.எஸ். வீரவர்த்தன (சிவில் பாதுகாப்புத் திணை) (மின்சார வேலி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்), வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
திரு விஜயமுனி சவ்ரி சொய்ஸா, முகாமையாளர், இலங்கை வனவிலங்குகள் பாதுகாப்பு நம்பிக்கை நிதியம்

*ரூ'000*

| குழு, வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சு | 2013 | 2014 மீள் வரவுசெலவுத்திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 1,095,166 | 1,541,400 | 1,400,000 |
| மீண்டெழும் செலவினம் | 601,556 | 707,300 | 730,000 |
| மூலதனச் செலவினம் | 493,610 | 834,100 | 670,000 |
| 179 - குழு, வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சர் | | | |
| மொத்தச் செலவினம் | 98,302 | 103,475 | 96,700 |

| | | | |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | 74,438 | 80,025 | 86,700 |
| மூலதனச் செலவினம் | 23,864 | 23,450 | 10,000 |

284 – வன விலங்கு பாதுகாப்பு திணைக்களம்

| | | | |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 996,864 | 1,437,925 | 1,303,300 |
| மீண்டெழும் செலவினம் | 527,118 | 627,275 | 643,300 |
| மூலதனச் செலவினம் | 469,746 | 810,650 | 660,000 |

குழு, வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சின் 179, 284 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளைக் கருத்திற்கொண்டு அங்கீகரித்தது.

திரு. பி.எச்.ஏ. விமலவீர, சிரேஷ்டஉதவிச்செயலாளர், தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு
திரு. ஏ. பொடிராலாமி, சிரேஷ்டகணக்காளர், தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு
திரு. டப்ளியூ.டப்ளியூ. ஹரிசன், பணிப்பாளர் (திட்டமிடல்), தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு

திரு. லக்ஷான்சுபசிங்ஹ, உதவிப்பணிப்பாளர் (திட்டமிடல்), தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு

திரு. எம்.பி.எம்.பி.டப்ளியூ.யு.ஏ. ராஜசிங்ஹ, கணக்காளர், தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு

திரு. ஈ.ஜே.சி. குமார, உதவிச்செயலாளர், தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு

எம்.எஸ். டி.டி. நிஷானி, முகாமைத்துவஉதவியாளர் III, தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு

திரு. ரேனுகாதுஷ்யந்தபெரேரா, தேசியபோக்குவரத்துஆணைக்குழு

திரு. கே. புத்ததாச, வேலைப்பணிப்பாளர், தேசியபோக்குவரத்துஆணைக்குழு

திருமதிடப்ளியூ.பி.டி.வி.எம். வீரசிங்ஹ, பணிப்பாளர்நாயகம் (பதில்), தேசியபோக்குவரத்துஆணைக்குழு

திரு. எச்.டப்ளியூ. விபுலசேன, பணிப்பாளர் (திட்டமிடல்), தேசியபோக்குவரத்துஆணைக்குழு

திருமதிகே.ஏ.எஸ். கருணாரத்ன, உதவிப்பணிப்பாளர் (பதில்), தேசியபோக்குவரத்துஆணைக்குழு

திரு. எஸ்.டி. அத்துகோரல, உதவிப்பணிப்பாளர் (பதில்), தேசியபோக்குவரத்துஆணைக்குழு

எம்.எஸ். நிரஞ்சலிபெரேரா, நிறைவேற்றுஉத்தியோகத்தர் III, தேசியபோக்குவரத்துஆணைக்குழு

திரு. பி.எம். இப்திகார், நிறைவேற்றுஉத்தியோகத்தர் III, தேசியபோக்குவரத்துஆணைக்குழு

திருமதிஹிரானிதேனுவர, நிறைவேற்றுஉத்தியோகத்தர் III, தேசியபோக்குவரத்துஆணைக்குழு

திருமதிடி.என். வீரதுங்க, கணக்காளர், தேசியபோக்குவரத்துஆணைக்குழு

திரு. எச்.எல்.எஸ்.ஆர். பிரியமாலி, உதவிக்கணக்காளர், தேசியபோக்குவரத்துஆணைக்குழு

தனியார் போக்குவரத்துச் சேவைகள்அமைச்சின் 184 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுளை குழு ஆராய்ந்தது.

| தனியார்போக்குவருத்துசவைகள் அமைச்சு<br>*ரூ'000* | 2013 | 2014<br>மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015<br>மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 504,926 | 769,000 | 881,000 |
| மீண்டெழும் செலவினம் | 431,563 | 575,000 | 681,000 |
| மூலதனச் செலவினம் | 73,363 | 194,000 | 200,000 |
| 184 - தனியார்போக்குவருத்துசவைகள் அமைச்சு | | | |
| மொத்தச் செலவினம் | 504,926 | 769,000 | 881,000 |
| மீண்டெழும் செலவினம் | 431,563 | 575,000 | 681,000 |
| மூலதனச் செலவினம் | 73,363 | 194,000 | 200,000 |

தனியார் போக்குவரத்துச் சேவைகள்அமைச்சின் செயலாளர் திரு பத்மசிறி ஜயமான்ன 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கான இலக்குத் திட்டம் ஆகியன தொடர்பான ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

நிரல் அமைச்சுக்களினதும் மாகாண சபைகளினதும் ஒருங்கிணைப்புடன் கூடிய தனியார் போக்குவரத்து தேசிய கொள்கை பற்றி கௌரவ மஹிந்த சமரசிங்ஹ அவர்கள் எழுப்பிய ஒரு கோள்விக்குப் பதிலளிக்கையில், செயலர், அமைச்சு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாகாணப் போக்குவரத்து அதிகார சபைகளுடனும் மாகாணப் போக்குவரத்து அமைச்சுகளுடனும் மாதாந்தம் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது எனவும், இந்தக் கலந்துரையாடல்களுக்கு போக்குவரத்து அமைச்சும் அழைக்கப்பட்டது எனவும் குறிப்பிட்டார். சகல நிறுவனங்களையும் ஒரே கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் வகையில் ‘மஹிந்த சிந்தனை’ கொள்கை இலக்கை அடைவதற்கு முறையான ஒரு சட்ட நடைமுறை இருக்க வேண்டும் எனவும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இந்த நடைமுறைக்கான நிதி மற்றும் சட்டம் சார்ந்த உதவிகளை நல்கி வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னைய குழுவில் முன்வைக்கப்பட்ட சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி கௌரவ ஜோன் அமரதுங்க வினவினார். இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கையில், செயலாளர், தனியார் போக்குவரத்து தொடர்பான தேசிய போக்குவரத்துக் கொள்கைக்கு ஏற்கெனவே அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது எனவும், எமது அமைச்சினாலும் மற்றும் போக்குவரத்து அமைச்சினாலும் இணைந்து ஒரு அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். குறித்த கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குழு சிபாரிசு செய்தது.

பெரும் நகரங்களில், குறிப்பாக கொழும்பு நகரத்தில் காணப்படும் பெரும் போக்குவரத்து நெரிசல்கள் பற்றி கௌரவ ஜோன் அமரதுங்க அவர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில், செயலாளர், அமைச்சு JICA நிதி உதவியைக் கொண்டு 'கொழும்பு நகரத் தலைமைத் திட்டத்தை' வகுத்தமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது எனவும், இறுதி அறிக்கை திசம்பர் மாதத்தில் வெளியிடப்படும் எனவும் மற்றும் இந்த அறிக்கை மூலம் போக்குவரத்து நெரிசல்களையும் வளி மாசடைவுகளையும் கட்டுப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார். அமைச்சு மொரட்டுவை, கடுவளை, மஹரகம மற்றும் கிரிபத்கொடை ஆகிய இடங்களிலிருந்து வருகின்ற 'வாகனங்களுக்கான நிறுத்தல் மற்றும் வாகனம் ஓட்டல்' தொடர்பான ஒரு நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்த திட்டமிட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சித்திட்டத்தை விரைவில் செயற்படுத்தும் அவசியத்தை கௌரவ தவிசாளர் மற்றும் கௌரவ ஜோன் அமரதுங்க ஆகியோர் வலியுறுத்தினர்.

சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் ஆகியோர் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு பற்றிப் பேசிய போது, செயலாளர், புள்ளிவிபரங்களை ஆராய்வதற்காக ஒரு உப குழு ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் குழுவின் அறிக்கை 2013 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டிருந்தது எனவும் குறிப்பிட்டார். அந்த அறிக்கை தொடர்பில் பேசிய போது, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் தேசிய மன்றம் ஆகியவற்றின் மேற்பார்வையின் கீழ் சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் பயிற்சியளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

போக்குவரத்தின் போது பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் பற்றி கௌரவ (திருமதி) ரோஸிசேனாநாயக்க அவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், அமைச்சர் கௌரவ சீ.பீ. ரத்நாயக்க, எதிர்காலத்தில் GPRS கண்காணிப்பு நடைமுறை அறிமுகப்படுத்தப்படும் எனவும் மற்றும் இது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் மேலும் வலுப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

குழு, தனியார் போக்குவரத்துச் சேவைகள்அமைச்சின் 184 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை அங்கீகரித்தது.

**மு.ப. 11.30 மணி**
**சமூகமளித்தோர்:**
கௌரவ மஹிந்த சமரசிங்ஹ (தவிசாளர்)
கௌரவ லசந்த அலகியவன்ன
கௌரவ ஜோன் அமரதுங்க
கௌரவ ஆர். யோகராஜன்
கௌரவ (டாக்டர்) (திருமதி)சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

திரு. நீல் இத்தவெல, பிரதிச் செயலாளர்நாயகமும் குழுச் செயலாளரும்

**சமூகமளித்திருந்த அமைச்சர்கள்:**
கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க, தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சர்

சமூகமளித்திருந்த ஏனைய உறுப்பினர்கள்:
கௌரவ சீ.பீ. ரத்நாயக்க
கௌரவ (திருமதி) ரோஸிசேனாநாயக்க
கௌரவநலின்பண்டாறஜயமஹ

**திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**

திரு கோசல கமகே, உதவிப் பணிப்பாளர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
திரு கே.எம். ரிஸ்வி, உதவிப் பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்

**தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சு**

**சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்**

திருமதிதாராவிஜேயதிலக்க, செயலாளர், தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சு
திருமதிடி.கே. ரேனுகாஏக்கநாயக்க, மேலதிகசெயலாளர் (நிர்வாகம்மற்றும்நிதி), தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சு
திரு. மாதவவித்யாரத்ன, மேலதிகசெயலாளர் (தொழில்நுட்பமாற்றல்), தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சு
திரு. எம்.எம். தயரத்ன, சிரேஷ்டகணக்காளர், தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சு
திரு. ஏ.கே.பி. பீரிஸ், சிரேஷ்டஉள்ளககணக்காய்வாளர், தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சு
திருமதிஹிமாலிடப்ளியூ.கே. அதாவுத, பணிப்பாளர் (சர்வதேச), தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சு
திருமதிஎஸ்.ஆர்.பி.ஆர்.ஜி.சி. கன்னொருவ, பணிப்பாளர் (திட்டமிடல்), தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சு
திருமதிஏ.எல். நஸீமா, பணிப்பாளர் (திட்டமிடல்), தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சு
டாக்டர்டி.எம்.டி.ஓ.கித்சிறிதிசாநாயக்க, தவிசாளர், இலங்கைதரநியமங்கள்நிறுவனம்
டாக்டர்எல்.என். செனவீர, பணிப்பாளர்நாயகம், இலங்கைதரநியமங்கள்நிறுவனம்
திரு. டப்ளியூ.ஜி.எம்.எஸ். பெரேரா, உள்ளககணக்காய்வாளர், இலங்கைதரநியமங்கள்நிறுவனம்
திரு. டி.பி.எம். ராஜசிங்ஹ, சிரேஷ்டபிரதிப்பணிப்பாளர் (நிதி), உள்ளககணக்காய்வாளர், இலங்கைதரநியமங்கள்நிறுவனம்
பொறியியலாளர்அநுரவிஜயாபல, தவிசாளர், இலங்கைதேசியபொறியியல்ஆராய்ச்சிமற்றும்அபிவிருத்திநிலையம்
பொறியியலாளர்டி.டி. ஆனந்தநாமல், பணிப்பாளர்நாயகம், இலங்கைதேசியபொறியியல்ஆராய்ச்சிமற்றும்அபிவிருத்திநிலையம்
பொறியியலாளர்ஜி.கே.கே. தசில்வா, பிரதிப்பணிப்பாளர்நாயகம் (ஆராய்ச்சிமற்றும்அபிவிருத்தி), இலங்கைதேசியபொறியியல்ஆராய்ச்சிமற்றும்அபிவிருத்திநிலையம்
திருமதிடி.வி.எஸ். பெரேரா, நிதிமுகாமயாளர், இலங்கைதேசியபொறியியல்ஆராய்ச்சிமற்றும்அபிவிருத்திநிலையம்
திரு. தீபல்சூரியாரச்சி, ஆணையாளர், இலங்கைபுத்தாக்குனர்ஆணைக்குழு
திரு. தினேஷ்சத்ருகல்சிங்க, பணிப்பாளர், இலங்கைபுத்தாக்குனர்ஆணைக்குழு
பேராசிரியர்சி.பி. திஸாநாயக்க, பணிப்பாளர், தேசியஅடிப்படைக்கல்விநிறுவகம்
டாக்டர்பி.எஸ்.பி. வந்துர்கல, செயலாளர், தேசியஅடிப்படைக்கல்விநிறுவகம்
திருமதிபி.எஸ்.எஸ். சமரக்கொடி, பிரதிக்கணக்காளர்,
பேராசிரியர்டப்ளியூ.எல். சுமதிபால, தவிசாளர்,தேசிய விஞ்ஞான மன்றம்
திருமதிபி.ஏ.எஸ். பெரேரா, பதில்பணிப்பாளர்நாயகம்,
செல்விரி.டி.பி.பி. சமரநாயக்க, சிரேஷ்டகணக்காளர்,
பெராசிரியர்எச்.வை. ரஞ்ஜித்பெரேரா, தவிசாளர், நவீனதொழில்நுட்பத்துக்கானஆதர்சிகிளார்ச்நிறுவனம்
பொறியியலாளர்சனத்பன்னவன்னகே, பணிப்பாளர்நாயகம், நவீனதொழில்நுட்பத்துக்கானஆதர்சிகிளார்ச்நிறுவனம்
திரு. டப்ளியூ.பி. சில்வா, மேலதிகசெயலாளர்நாயகம் (நிர்வாகம்மற்றும்நிதி), நவீனதொழில்நுட்பத்துக்கானஆதர்சிகிளார்ச்நிறுவனம்
திரு. அசோகசஞ்ஜீவவீரப்பெரும, சிரேஷ்டபிரதிப்பணிப்பாளர் (நிதி),

நவீனதொழில்நுட்பத்துக்கானஆதர்சிகிளார்ச்நிறுவனம்
திரு. ஆர்.ஏ. காமினி, உதவிப்பணிப்பாளர் (நிர்வாகம்),
நவீனதொழில்நுட்பத்துக்கானஆதர்சிகிளார்ச்நிறுவனம்
திரு. ஜே.பி.டி.எஸ். அதுரேலிய, பதில்பிரதிப்பணிப்பாளர்,
நவீனதொழில்நுட்பத்துக்கானஆதர்சிகிளார்ச்நிறுவனம்
பேராசிரியர்டப்ளியூ. அபேயவிக்ரம, தவிசாளர், கைத்தொழில்தொழில்நுட்பநிறுவனம்
திரு. டி.எல்.சி.ஏ. குணரத்ன, சிரேஷ்டபிரதிப்பணிப்பாளர் (நிதி),
கைத்தொழில்தொழில்நுட்பநிறுவனம்
திரு. பி.பி. குணசேன, தவிசாளர்,
திரு. ரி. விக்ரமசிங்ஹ, பணிப்பாளர், கைத்தொழில்தொழில்நுட்பநிறுவனம்
திரு. டி.ஜி. புஷ்பகுமார, பிரதிப்பணிப்பாளர் (நிர்மற்றும்நிர்வாகம்),
கைத்தொழில்தொழில்நுட்பநிறுவனம்
திருமதிமனிஷாசி. ராஜபக்ஷே, நிறைவேற்றுசெயலாளர், தேசியஆராய்ச்சிசபை
திரு. சமந்தகுமாரகம்ஹேவ, உதவிக்கணக்காளர், தேசியஆராய்ச்சிசபை
பேராசிரியர்தம்மிகாதந்திரிகொட, தவிசாளர்,
தேசியவிஞ்ஞானமற்றும்தொழில்நுட்பஆணைக்குழு
டாக்டர்முதிதலியனகெதர, பணிப்பாளர், தேசியவிஞ்ஞானமற்றும்தொழில்நுட்பஆணைக்குழு
திருமதிஜி.சி. குமாரிபீரிஸ், பிரதிப்பணிப்பாளர் (நிதிமற்றும்நிர்வாகம்),
தேசியவிஞ்ஞானமற்றம்தொழில்நுட்பஆணைக்குழு
திரு. டி.ஜி. விக்ரமநாயக்க, பிரதிப்பணிப்பாளர், அணுசக்திஅதிகாரசபை
திரு. எம்.எம்.பி. விஜேசேகர, பதில்சிரேஷ்டபிரதிப்பணிப்பாளர், அணுசக்திஅதிகாரசபை
திரு. எச்.எல். அனில்ரஞ்ஜித், பணிப்பாளர் (கதிர்வீச்சுபாதுகாப்புபிரிவு),
அணுசக்திஅதிகாரசபை
திரு. பி.ஆர். குணவர்தன, சிரேஷ்டநிறைவேற்றுஉத்தியோகத்தர்,
பொலிப்டோலங்காதனியார்கம்பனி
திரு. நிரோஷ்தர்மரத்ன, நிதிமுகாமையாளர், சிலின்டெக்பிறைவேட்லிமிடட்
திரு. ஹரின்தசில்வாவிஜேரத்ன, சிரேஷ்டநிறைவேற்றுஉத்தியோகத்தர்,
சிலின்டெக்பிறைவேட்லிமிடட்

குழு, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் 133 ஆம் இலக்க செலவினத் தலைப்புக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்தது.

| தொழிநுட்ப ஆராய்ச்சி அமைச்சு. | 2013 | 2014 மீள் வரவுசெலவுத்திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 3,203,466 | 3,913,298 | 4,203,000 |
| மீண்டெழும் செலவினம் | 1,154,544 | 1,392,330 | 1,578,000 |
| மூலதனச் செலவினம் | 2,048,922 | 2,520,968 | 2,625,000 |
| 133 - தொழிநுட்ப ஆராய்ச்சி அமைச்சர் | | | |
| மொத்தச் செலவினம் | 3,203,466 | 3,913,298 | 4,203,000 |
| மீண்டெழும் செலவினம் | 1,154,544 | 1,392,330 | 1,578,000 |

தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் திருமதி தாரா விஜேதிலக்க 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கான இலக்குத் திட்டம் ஆகியன தொடர்பான ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

அரசாங்கம் அறிவு மையப் பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றுக்கு போதிய நிதிகளை ஒதுக்கியிருந்ததா எனவும் மற்றும் இந்த அமைச்சு கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு போன்ற நிரல் அமைச்சுக்களுடன் கொடுக்கல்வாங்கல்களை செய்து வந்ததா எனவும் கௌரவ (திருமதி) ரோஸிசேனாநாயக்க வினவினார். மேற்குறித்த கேள்விக்குப் பதிலளிக்கையில், கௌரவ அமைச்சர், தனது அமைச்சு 27 அமைச்சுக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது எனவும், ஏற்கெனவே கல்வி அமைச்சையும் மற்றும் உயர் கல்வி அமைச்சையும் அதே நேரம் ஏனைய சகல உரிய அமைச்சுக்களையும் அவற்றின் மூலதன வரவுசெலவுத்திட்டத்தில் ஆகக்குறைந்தது 1%

வீதத்தையாவது ஆராய்ச்சி அபிவிருத்தி முதலீட்டுத் திட்டத்திற்குப் பங்களிக்குமாறு கேட்டிருந்ததாகவும் குறிப்பிட்டார். தவிசாளர், அமைச்சரையும் மற்றும் அமைச்சின் அதிகாரிகளையும் அவர்கள் மேற்கொண்ட முயற்சிக்காக பராட்டினார். அமைச்சுக்கு வழங்கப்பட்ட அந்த நிதி போதுமானதல்ல எனவும், 2015 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்தில் காணப்படும் முழுமொத்த ஆராய்ச்சி அபிவிருத்திப் பெஷபேறுகளை எடுத்து நோக்கும் போது, அதில் ஒரு அதிகரிப்பு இருந்திருந்தது எனவும் தவிசாளர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கையில் பெறுமதி வாய்ந்த வளங்கள் பொருளாதார அபிவிருத்திற்கு ஏன் பயன்படுத்தப்படுவதில்லை என கௌரவ ஜோன் அமரதுங்க வினவினார். இலங்கையில் காணப்படும் பொசுபேற்று மற்றும் கணிய மணல் வளங்களில் 2% வீதம் மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றது என சுட்டிக்காட்டியதுடன், அவர் இது தொடர்பில் ஆராய்ச்சி ஏதும் மேற்கொள்ளப்பட்டிருந்ததா எனவும் வினவினார். SLINTECH (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர் (பி.நி.அ.), தனது நிறுவனம் இலங்கையிலுள்ள கணிய மணல் வளம் தொடர்பான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முயற்சி வந்ததாகவும் மற்றும் தனது நிறுவனம் நாட்டின் சற்று முக்கியமான வளங்களாக இருந்துள்ள டிட்டானியம், இல்மனைற்று, களிமண் படிவுகள் மற்றும் கிராபைட்டு முதலியவற்றை ஏற்கெனவே கண்பிடித்துள்ளது எனவும் தெளிவுபடுத்திக் கூறினார். நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்யும் நோக்கில் விவசாயம், புடவைக் கைத்தொழில் மற்றும் போஷாக்கு முதலிய பிரிவுகளில் கவனம் செலுத்தி கணிய மணல் வளத்தின் பயன்பாட்டின் நிமித்தம் உதவுவதற்காக SLINTECH நிறுவனம் முயற்சித்து வந்தது எனவும் அவர் குறிப்பிட்டார். டிட்டானியம் மற்றும் தோரியம் ஆகியன தொடர்பில் முதலிடுவதற்கான ஒரு மூன்றாண்டு நிகழ்ச்சித்திட்டத்தை ஏற்கெனவே இனங்கண்டிருந்ததாகவும், லைம்நைட்டு மற்றும் டிட்டானியம் ஆகிய இரண்டையும் கருத்திற் கொண்டு அவற்றுக்காக நிதியிடுவதற்கு திறைசேரி நிதியை வழங்கியிருந்தது எனவும் மற்றும் அதுவே ஆரம்பிக்கப்பட்ட நடபடிமுறை எனவும் மற்றும் அடுத்து வரும் 3-5 ஆண்டுகளில் இதனை ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் மேலும் குறிப்பிட்டார்.

பொசுபேற்று சல்பூரிக் அமிலம் அடங்கிய ஒரு திரவ வகைப் பசளையாகக் கருதப்படுகின்றது எனவும் அது சுற்றாடலுக்கு பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும் எனவும் கௌரவ அமைச்சர் குறிப்பிட்டார். எனினும், SLINTECH நிறுவனம் சுற்றாடல் நேயமாகப் பயன்படுத்தக்கூடிய புதிய ஒரு தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்கு முனைந்து வருகின்றது எனவும், இல்மனைற்றை வெற்றிகரமான முறையில் டிட்டானியமாக மாற்றியது எனவும், தற்பொழு மெற்றிக் டொன் ஒன்றுக்கு 400 மெ.டொ. என்ற பெறுமானத்தில் இந்த டிட்டானியம் கிடைக்கக்கூடியதாகவுள்ளது எனவும், இல்மனைற்றுக்கு அத்தகைய பெறுமதி சேர்வு இருக்குமாயின் அதன் பெறுமானம் மெற்றிக் டொன் ஒன்றுக்கு 14000 அ.டொ. வரை உயர்வடையலாம் எனவும் குறிப்பிட்டார்.

குழு, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் 133 ஆம் இலக்க செலவினத் தலைப்புக்கான மதிப்பீடுகளை அங்கீகரித்தது.

**பி.ப. 2.00 மணி**

***சமூகமளித்தோர்:***

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ
கௌரவ லசந்த அலகியவன்ன
கௌரவ கந்தையா பிரேமசந்திரன்
கௌரவ பொன். செல்வராசா
கௌரவ ஆர். யோகராஜன்
கௌரவ (டாக்டர்) (திருமதி)சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே
கௌரவ ஹுனைஸ் பாறூக்

திரு. நீல் இத்தவெல, பிரதிச் செயலாளர்நாயகமும் குழுச் செயலாளரும்

***சமூகமளித்திருந்த அமைச்சர்கள்:***

கௌரவ நவின் திசாநாயக்க, அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்புஅமைச்சர்

கௌரவ சந்திரசேன, விஷேட கருத்திட்டங்கள் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்திப்

பிரதி அமைச்சரும்

**திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:**

திரு எஸ்.எஸ். முதலிகே, மேலதிகப் பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்
திரு ஜூட் நிலுக்ஷான், பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
திருமதி சித்தாரா ஜயசேன, பதில் பணிப்பாளர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
திரு எச்.எல்.ஜே.கே. அமரசேகர, உதவிப் பணிப்பாளர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்

**அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்புஅமைச்சு**

**சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்**

திரு. டப்ளியூ.எம். பந்துசேன, அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின்செயலாளர்

எம்.எஸ். டப்ளியூ.ஜே.பி.எஸ். வீரகோன், மேலதிகசெயலாளர்

செல்விடப்ளியூ.எம். அப்சராவீரசேகர, செயலாளரின்ஒருங்கிணைப்புச்செயலாளர்

திரு. பி.ஏ. திலகரத்ன, சிரேஷ்டகணக்காளர்

திரு. பிரசாத்பியசேன, பணிப்பாளர் (கருத்திட்டம்)

எம்.எஸ். ஏ.பி.எல்.டி. பர்னாந்து, பணிப்பாளர் (திட்டமிடல்)

எம்.எஸ். ஜி.என். முனவீர, உள்ளககணக்காய்வாளர்

செல்விகே.ஏ.ஐ.ஈ. கொள்ளுரே, உதவிச்செயலாளர்

செல்விஎஸ்.ஏ.எச். சமரசிங்ஹ, உதவிச்செயலாளர்

திரு. டி.எஸ். பரனமான, உதவிச்செயலாளர் (திட்டமிடல்)

ஒத்திவைப்பின் பிரகாரம் குழு கூடியது. தவிசாளர் பாராளுமன்றத்தில் முக்கிய விடயத்தைக் கவனிக்க வேண்டியருந்த காரணத்தினால் அவரால் கூட்டத்திற்குச் சமூகமளிக்க முடியவில்லை. ஆதலால் கௌரவ மஹிந்த சமரசிங்ஹஅவர்களை கூட்டத்திற்குத் தலைமை தாங்குமாறு கௌரவ லசந்த அலகியவன்ன அவர்கள் முன்மொழிய அதனை கௌரவ ஹுனைஸ் பாறூக் வழிமொழிந்தார்.

குழு, அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின்173 ஆம் இலக்க செலவினத் தலைப்புக்கான மதிப்பீடுகளை அங்கீகரித்தது.

| அரசாங்க அகமைத்துவ மறுசீமைப்பு அமைச்சு ரூ.'000 | 2013 | 2014 மீள் வரவுசெலவுத்திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 178,288 | 239,800 | 238,500 |
| மீண்டெழும் செலவினம் | 114,656 | 132,800 | 136,500 |
| மூலதனச் செலவினம் | 63,632 | 107,000 | 102,000 |
| 173 - அரசாங்க அகமைத்துவ மறுசீமைப்பு அமைச்சர் | | | |
| மொத்தச் செலவினம் | 178,288 | 239,800 | 238,500 |
| மீண்டெழும் செலவினம் | 114,656 | 132,800 | 136,500 |
| மூலதனச் செலவினம் | 63,632 | 107,000 | 102,000 |

அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்புஅமைச்சின் செயலாளர் திரு டப்ளியூ.எம். பந்துசேன 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கான இலக்குத் திட்டம் ஆகியன தொடர்பான ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

சகல அரச துறை நிறுவனங்களிலும் முன்மாதிரி அலுவலகங்களை உருவாக்குவதற்கான

ஒரு நாடளாவிய கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும், இருந்தாலும் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு எனத் திட்டமிடப்பட்ட 1000 மாதிரிகளில் 285 அலுவலகங்களுக்கு மாத்திரமே நிதி ஒதுக்கப்பட்டிருந்தது எனவும் செயலாளர் தெளிவுபடுத்திக் கூறினார். பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்து பரிகாரங்களை வழங்குவதற்கான தகவல் தொழில்நுட்பம் (த.தொ.) ஒரு பொறிமுறைத்திட்டம் 2014 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது எனவும் மற்றும் 06/2006 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் சேவைப் பிரமாணக்குறிப்புகளையும் ஆட்சேர்ப்புத் திட்டங்களையும் திருத்துவதற்கு நடவடிக்கைள் எடுக்கப்பட்டு வந்தன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். அரச துறை நிறுவனங்களிலுள்ள தடைகளைத் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு 'சிவப்பு நாடா சவால்' (Red Tape Challenging) என்ற பெயரில் ஒரு கருத்திட்டம் ஒரு முன்னோடிக் கருத்திட்டமாக செயற்படுத்தப்பட்டிருந்தது எனவும் செயலாளர் மேலும் தெரிவித்தார். E-மனித வளம் என்ற ஒரு தேசிய முகாமைத்துவ முறைமையும் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறைந்த தர சிற்றூழியர்களுக்கு உயர் தகைமைகள் அவசியமில்லை என சுட்டிக்காட்டிய கௌரவ ஹுனைஸ் பாறூக், அத்தகைய ஆட்சேர்ப்புத் திட்டத்தைத் (ஆ.தி.) திருத்துமாறும் கேட்டுக்கொண்டார். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடிய பின்னர் அந்தந்த அமைச்சுகளினால் அத்தகைய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென செயலாளர் தெளிவுபடுத்தினார்.

வட மாகாணத்தில் ஒரு சில பிரதேச செயலகங்களில் பொது மக்கள் சந்திப்பு நாட்களிலும் கூட பொது மக்கள் அலுவலர்களை சந்திக்கவியலாத நிலை இருப்பதாக சுட்டிக்காட்டிய கௌரவ ஹுனைஸ் பாறூக் இந்த நிலையை சீர்செய்துகொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார். 'சிவப்பு நாடா சவால்' எண்ணக்கரு மற்றும் 'அலுவலக மாதிரி' ஆகிய எண்ணக்கருக்களின் மூலம் அத்தகைய விடயங்கள் அடையாளப்படுத்தப்பட்டு வந்ததாகவும் மற்றும் குருனாகல், நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலுள்ள பல பி.செ. அலுவலகங்கள் முன்மாதிரி அலுவலகங்களாக அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததாகவும் செயலாளர் தெரிவித்தார். இந்த எண்ணக்கருவை அறிமுகப்படுத்தும் பொருட்டு ஒரு சில அலுவலர்களை நியமிக்குமாறு வட மாகாண முதலமைச்சரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது எனவும் அவரிடமிருந்து ஒரு பதிலை எதிர்பார்த்த வண்ணமிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். மாவட்ட செயலகங்களுக்கு அறிவித்து செயற்பாட்டைத் துரிதப்படுத்துமாறு குழு சிபாரிசு செய்தது.

இந்தக் கருத்திட்டத்தை உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கும் விரிவுபடுத்துமாறு கௌரவ (டாக்டர்) (திருமதி)சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே முன்மொழிந்தார். திறைசேரியின் மூலம் நிதி கிடைக்கச் செய்யப்பட்டால் அதனை மேற்கொள்ள முடியும் எனவும், எழுத்திலான வேண்டுகோள்கள் கிடைக்கப்பெற்றால் இணை நிறுவன நடபடிமுறைகளைப் பகுப்பாய்வு செய்ய முடியும் எனவும் செயலாளர் கூறினார். கௌரவ (டாக்டர்) (திருமதி)சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே மற்றும் கௌரவ ஹுனைஸ் பாறூக் ஆகியோர் அதற்கிணங்க தாம் வேண்டுகோள்களை விடுப்பதாகத் தெரிவித்தனர். அமைச்சு தயாரித்த சகல மென்பாகப் பொதிகளும் மூன்று மொழிகளிலும் அமைந்திருக்கும் எனவும் செயலாளர் குறிப்பிட்டார்.

வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு அமைச்சு மேற்கொண்ட பணியை குழு பாராட்டியது.

குழு, அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்புஅமைச்சின் 173 ஆம் இலக்க செலவினத் தலைப்புக்கான மதிப்பீடுகளை அங்கீகரித்தது.

**விசேட கருத்திட்டங்கள் அமைச்சு**

**சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்**

திரு. விஜேரத்னசாகலசூரிய, செயலாளர், விசேட கருத்திட்டங்கள் அமைச்சு

திரு. ஜி.எல்.எஸ். சேனாதீர, மேலதிகசெயலாளர், விசேட கருத்திட்டங்கள் அமைச்சு

திரு. ஈ.எம்.ரி. ஏக்கநாயக்க, சிரேஷ்டகணக்காளர், விசேட கருத்திட்டங்கள் அமைச்சு

திரு. கே. நிஷாந்தபுஷ்பகுமார, உதவிப்பணிப்பாளர் (திட்டமிடல்), விசேட கருத்திட்டங்கள் அமைச்சு

திருமதிஎம். நிலங்ககுணவர்தன, உதவிச்செயலாளர், விசேட கருத்திட்டங்கள் அமைச்சு

டாக்டர். சி. ஜயசுமான, கருத்திட்டபணிப்பாளர், விசேட கருத்திட்டங்கள் அமைச்சு

குழு, விஷேட கருத்திட்டங்கள்அமைச்சின் 191 ஆம் இலக்க செலவினத் தலைப்புக்கான மதிப்பீடுகளை ஆராய்ந்தது.

*ரூ,000*

| விசேட கருத்திட்டங்கள் அமைச்சு | 2013 | 2014 மீள் வரவுசெலவுத்திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | | | 91,000 |
| மீண்டெழும் செலவினம் | | | 41,000 |
| மூலதனச் செலவினம் | | | 50,000 |
| 191 - விசேட கருத்திட்டங்கள் அமைச்சர் | | | |
| மொத்தச் செலவினம் | | | 91,000 |
| மீண்டெழும் செலவினம் | | | 41,000 |
| மூலதனச் செலவினம் | | | 50,000 |

விஷேட கருத்திட்டங்கள்அமைச்சின் செயலாளர் திரு விஜேரத்ன சகலசூரிய 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கான இலக்குத் திட்டம் ஆகியன தொடர்பான ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்தார். சுகாதாரம், கமத்தொழில் மற்றும் நீர் விநியோக வடிகாலமைப்பு ஆகிய அமைச்சுக்கள் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்துவதிலும் குணப்படுத்துவதிலும் ஒரு சில நடவடிக்கையை மாத்திரம் தனது அமைச்சு ஒருங்கிணைக்கின்றது என அவர் தெளிவுபடுத்திக் கூறினார்.

வவுனியா பகுதியில் வசிக்கின்ற சிறுநீரக நோயாளர்கள் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் போன்ற வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காகச் செல்வது கடினம் என்பதால் வவுனியா வைத்தியசாலைக்கு சிறுநீரக நோயாளர்களுக்கான ஒரு சில இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்குமாறு கௌரவ கந்தையா பிரேமசந்திரன் கேட்டுக்கொண்டார். இந்த விடயம் பற்றி சுகாதார அமைச்சுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன எனவும் வவுனியா வைத்தியசாலைக்கு சிறுநீரக நோய் நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டால் அத்தகைய ஒரு சுத்திகரிப்பு இயந்திரத்தை வவுனியா வைத்தியசாலையில் நிறுவ முடியும் எனவும் கருத்திட்டப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

குழு, விஷேட கருத்திட்டங்கள்அமைச்சின் 191 ஆம் இலக்க செலவினத் தலைப்புக்கான மதிப்பீடுகளை அங்கீகரித்தது.

**ஒப்பம்/ நீல் இத்தவெல**
**குழுவின் செயலாளர்.**

## 2015 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவினத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான தெரிகுழுவின் எட்டாவதுகூட்ட அறிக்கை

### 2014 ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.30 மணி

**சமூகமளித்தோர்:**

கௌரவ நிமல் சிறிபால த சில்வா (தவிசாளர்)
கௌரவ லசந்த அலகியவன்ன
கௌரவ ஜோன் அமரதுங்க
கௌரவ ஆர்.யோகராஜன்

திரு. நீல் இத்தவெல, பிரதிச் செயலாளர்நாயகமும் குழுச் செயலாளரும்

**சமூகமளித்திருந்த அமைச்சர்கள்:**

கௌரவ மஹிந்த அமரவீர, அனர்த்த முகாமைத்துவஅமைச்சர்

**<u>பொதுத் திறைசேரியிலிருந்து சமூகமளித்திருந்த உத்தியோகத்தர்கள்:</u>**

திரு. திருமதி கீதா விமலவீர, மேலதிகபணிப்பாளர், தேசியவரவுசெலவுத்திட்டதிணைக்களம்

திருமதி சி. சேனாநாயக்க, பணிப்பாளர்நாயகம், தேசியவரவுசெலவுத்திட்டதிணைக்களம்

திரு. டீ.எச்.எஸ். புள்ளேபெரும, பணிப்பாளர், முகாமைத்துவசேவைகள்திணைக்களம்

ஒத்திவைப்பின் பிரகாரம், குழுவின் தவிசாரளர் கௌரவ நிமல் சிறிபால த சில்வா கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

அனர்த்த முகாமைத்துவஅமைச்சின் 106, 304 ஆம் செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை குழு ஆராய்ந்தது.

| **அனர்த்த முகாமைத்துவ அமைச்சு** *ரூ'000* | 2013 | 2014 மீள் வரவுசெலவுத் திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 1,768,632 | 4,249,178 | 3,140,000 |
| மீண்டெழும் செலவினம் | 647,195 | 903,436 | 940,000 |
| மூலதனச் செலவினம் | 1,121,438 | 3,345,742 | 2,200,000 |
| 106 - அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் | | | |
| மொத்தச் செலவினம் | 1,151,490 | 3,964,053 | 2,569,100 |
| மீண்டெழும் செலவினம் | 467,191 | 701,976 | 717,100 |
| மூலதனச் செலவினம் | 1,054,299 | 3,262,077 | 1,852,000 |
| 304 – வளிமணடளவியல்திணைக்களம் | | | |
| மொத்தச் செலவினம் | 247,143 | 285,125 | 570,900 |
| மீண்டெழும் செலவினம் | 180,004 | 201,460 | 222,900 |
| மூலதனச் செலவினம் | 67,139 | 83,665 | 348,000 |

2014ஆம்ஆண்டின்செயலாற்றுகை, 2015 ஆம்அண்டுக்குறியஉத்தேசதிட்டம்மற்றும் “இலங்கைதொடர்ந்தும்முன்னேற்றபாதையில் – 2020” நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் 2014-2016 வரைஅனர்த்தமுகாமைத்துவம்தொடர்பில்மத்தியகாலமுதலீட்டுத்திட்டங்கள்பற்றியவிபரங்கள் அடங்கியஅறிக்கையொன்றைஅனர்த்தமுகாமைத்துவஅமைச்சின்செயலாளர்திருமதிஎஸ்.எம். மொஹமட்அவர்கள்சமர்ப்பித்தார்கள்.

கௌரவ தவிசாளர் பாராளுமன்றத்தில் முக்கியமான விடயத்தைக் கவனிக்க வேண்டியிருந்த காரணத்தினால் கௌரவ ஜோன் அமரதுங்க மு.ப. 11.00 மணியளவில் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

கொஸ்லந்த, மிரியபெத்த பிரதேசத்தில் நடைபெற்ற பரிதாபகரமான நிகழ்வு பற்றி குழுவின் கவலையைத் தெரிவித்த கௌரவ ஜோன் அமரதுங்க அவர்கள், குறிப்பிட்ட கோர நிகழ்வின் போது தனிப்பட்ட தரப்பினரிடமிருந்து கிடைத்த ஒத்துழப்பை பாராட்டியதுடன் திடீர் அனர்த்தங்களை முன்கூட்டியே அறிந்து கொள்வதற்காக வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய உபகரணங்கள் ஏதும் கிடைத்துள்ளதாவென வினவினார்.

2015ஆம் ஆண்டுக்குரிய வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் வானிலை எதிர்வுகூறல்களை மேம்படுத்துவதற்கென தேவையான நிதியிலிருந்து ஒரு பகுதி வழங்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். மேற்படிவிடயம் தொடர்பில் விளக்கமளித்த வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் 2000 மில்லியன் ரூபாய்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் இயலுமையினை மேம்படுத்துவதற்கான பாரிய செயல் திட்டத்தினை 2015ஆம் ஆண்டு சனவரி மாதம் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். அது தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள

நிதியிலிருந்து 12 வீதத்தை மட்டும் 2015ஆம் ஆண்டு தொடர்பில் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட கௌரவ ஆர். யோகராஜன் அவர்கள், அந்தநிதியினை 50 வீதமாக அதிகரிக்க வேண்டுமெனவும் பிரேரித்தார்.

நவீன மயப்படுத்தல் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களமானது நிதியினை விடுவிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென குழு விதந்துரைத்தது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, ஆபத்தானது என இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களை ஆபத்திலிருந்து விடுவித்துக்கொள்வதற்கான நடவடிக்கையினை தொடர்ச்சியாக பரிசீலிக்க வேண்டுமெனவும் அந்த மக்கள் பாதுகாப்பான பிரதேசங்களில் மீள் குடியமர்த்தப்படும்வரை அவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துவது அமைச்சின் பொறுப்பாகுமெனவும் கௌரவ யோகராஜன் அவர்கள் வலியுறுத்தினார்கள். மண் சரிவினை குறைத்துக் கொள்வதற்கு நீண்டகால உபாய முறைகள் அடங்கிய அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று அமைச்சரவை அங்கீகாரம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின்செயலாளர்குறிப்பிட்டார்.

மண் சரிவு அச்சுறுத்தலை எதிர்நோக்கிய மக்களை மீள்குடியமர்த்தும் செயற்பாடு தொடர்பில் தோட்ட உரிமையாளர்கள் வழங்கிவரும் ஒத்துழைப்பு பற்றி வினவிய கௌரவ ஜோன் அமரதுங்க அவர்கள், தோட்ட மக்களை குடியமர்த்துவதற்கு பொருத்தமான அபாயமற்ற 34 காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அக்காணிகளை விடுவிப்பதற்கு தோட்ட உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

நிவாரணங்களை வழங்கும் செயன் முறையின் போது திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறுபவர்களை அடையாளம் காணும் ரூபா 3,000 அளவுகொலானது நடைமுறை சாத்தியமற்ற தெனக்குறிப்பிட்ட அனர்த்த முகாமைத்துவ கௌரவ அமைச்சர் அதனை நியாயமான தொகையாக அதிகரிக்க வேண்டுமெனவும் அறிவித்தார்.

அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் எதிர்வரும் இரண்டு வாரங்களில் முடிவொன்றை வழங்க முடியுமெனவும் தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் மேலதிகபணிப்பாளர் குறிப்பிட்டார்.

திறைசேரியின் சுற்றறிக்கையின் பிரகாரம் தனி வீட்டு அலகிற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் நிவாரணம் வழங்குவதற்கான இயலுமை இல்லை என்பதுடன் கூட்டுடமை வீடுகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் மட்டும் நிவாரணங்கள் வழங்கப்பட முடியுமெனவும் மேலும் தெரிவித்த கௌரவ அமைச்சர் அந்த சுற்றறிக்கை திருத்தப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்.

தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களததின் மேலதிக செயலாளர், அது பற்றி ஆராய்வதற்கு இணக்கம் தெரிவிததார்.

அனர்த்தங்களுக்கு உள்ளாகும் மக்கள் தொடர்பில் மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி தொடர்புகளை மீண்டும் இணைக்கும் போது தற்போது அமுலில் உள்ள சட்டத்தை மாற்றுவதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கௌரவ லசந்த அலகியவன்ன அவர்கள் பிரேரித்தார்கள்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செலவுத்தலைப்புக்கள் 106 மற்றும் 304 இற்கான வரைபானது குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது.

| **தலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சு** *ரூ'000* | 2013 | 2014 மீள் வரவுசெலவுத்திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 963,253 | 1,718,000 | 1,529,000 |
| மீண்டெழும் செலவினம் | 102,161 | 209,000 | 229,000 |

| | | | |
|---|---|---|---|
| மூலதனச் செலவினம் | 861,092 | 1,509,000 | 1,300,000 |
| 185 - தலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சர் | | | |
| மொத்தச் செலவினம் | 963,253 | 1,718,000 | 1,529,000 |
| மீண்டெழும் செலவினம் | 102,161 | 209,000 | 229,000 |
| மூலதனச் செலவினம் | 861,092 | 1,509,000 | 1,300,000 |

தொலைதொடர்புகள், தகவல்தொழில்நுட்பவியல் பற்றிய அமைச்சின் செயலாளர் திரு.எஸ்.எம். கோடாபய ஜயரத்ன அவர்களால் 2014 ஆம் ஆண்டுக்குரிய முன்னேற்றம் மற்றும் 2015 ஆம் ஆண்டுக்குரிய வேலைத்திட்டங்கள் அடங்கிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அமைச்சு, தான் ஈட்டிய வெற்றிகரமான அடைவுகள் தொடர்பில் சர்வதேச விருதினை பெற்றுக்கொண்டமை பற்றி தொலைதொடர்புகள், தகவல் தொழில்நுட்பிவியல் அமைச்சர் உட்பட ஏனைய உத்தியோகத்தர்களை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க அவர்கள் பாராட்டியதுடன் நுகர்வோர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் முறைபாடுகள் பற்றி லங்காரெலிகொம் காட்டும் முன்கூட்டிய கவனம் பற்றி கேள்வி எழுப்பினார்.

நுகர்வோர் சேவையினை மேம்படுத்தும் வகையில் சேவை வழங்கும் வெளிநிறுவனங்களில் தொழில்புரிவோருக்கு பயிற்சியளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக லங்காரெலிகொம் நிறுவனத்தின் பிரதான நிறைவெற்றுப் பணிப்பாளர் திரு. லலித்த சில்வா குறிப்பிட்டார்.

உத்தேச பரீட்சாத்த திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தல் பற்றி கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ லசந்த அலகியவன்ன அவர்கள் வினவினார்கள்.

கவத்திற் கொள்ளத்தக்க அளவு வெளிநாட்டுவருமானத்தை ஈட்டித்தரும் தகவல் தொழில்நுட்ப துறையினை மேம்படுத்துவதற்காக மென்பொருள் உற்பத்தி பொறியியல் நிகழ்ச்சித்திட்டங்களில் புத்தாக்கங்களுக்கான நிதிஏற்பாடுகளின் தேவை பற்றி இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் முகவரான்மையின் பிரதான நிறைவேற்றுப்பணிப்பாளர் திரு.நிசான் தேவபுர அவர்கள் குறிப்பிட்டார்கள். தகவல் தொழில்நட்பத் துறையில் ஈடுபட்டுள்ள அமைப்புக்கள், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உதவியுடன் இது பற்றிய திட்டமொன்று வரைவாக்கம் செய்யப்பட்டுள்ளதென குறிப்பிட்ட அவர், அதன் முற்று முழுதான திட்டம் எதிர் வரும் காலங்களில் சமர்ப்பிக்கப்படலாமெனக் குறிப்பிட்டார். இந்த வரைபுத்திட்டததின் பிரதிகள் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் கேட்டுக்கொண்டார்.

தற்போது காணப்படும் வலையமைப்பு அணவல் மற்றும் நாடு தழுவிய ரீதியிலான அணவலை வழங்குவது தொடர்பில் எவ்வளவு காலம் எடுக்கும் என கௌர வலசந்த அலகியவன்ன அவர்கள் வினவினார்கள். நடமாடும் தொழில்நுட்பத்தின் ஊடாக 3G மற்றும் 4G தொழில்நுட்பமானது கம்பியற்ற தொட்பாடல் முறைமையின் கீழ் 80% வலையமைப்பு அணவல் பெற்றுக்கொடுக்கப்பட்டிருப்பினும் தற்போது 24.5% அணவல் மட்டுமே காணப்படுவதாக அறிக்கைகள் தெரிவிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

2015 ஆம் ஆண்டின் போது ஒரு மில்லின் நுகர்வோருக்கு வலையமைப்பு வசதிகளை வழங்குவதற்கு ரெலிகொம் நிறுவனம் தன்னை தயார்படுத்தி வருவதாக லங்காரெலி கொம் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளர் குறிப்பிட்டார். வலையமைப்பு தொடர்பில் விலை அதிகமாகக் காணப்படும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நுகர்வோர் தயாராக இருப்பின் மேற்குறிப்பிட்ட இலக்கை இலகுவாக அடையமுடியுமென நிறுவனத்தின் மற்றுமொரு அதிகாரிகுறிப்பிட்டார்.

லங்காரெலிகொம் பயிற்சி நிலையங்களின் செயலூக்கம் பற்றி கௌரவ ஜோன் அமரதுங்க அவர்கள் வினவியதுடன் தற்போது ஐந்து பயிற்சி நிலையங்கள் செயற்படுவதாகவும் ரெலிகொம் ஊழியர்களுக்கு நான்கு நாட்கள் கட்டாயப் பயிற்சி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் வெளி நபர்களை பயிற்றுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து பயிற்சி பெறுபவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பது உகந்ததென கௌரவ ஜோன் அமரதுங்க அவர்கள் கருத்து தெரிவித்ததுடன் லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் குழு பிரதான நிறைவேற்று அதிகாரி அது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு இணக்கம் தெரிவித்தார்.

சந்தையில் விலை அதிகமாகக் காணப்படும் மடிகணனி (லெப்டொப்), மேசைக் கணனி (டெஸ்க்டொப்) போன்றவற்றை உற்பத்தி செய்யும் செயற்றிட்டமொன்றை ஆரம்பிக்கும் தேவை பற்றியும் கௌரவ ஆர்.யோகராஜயன் அவர்கள் வலியுறுத்தினார்.

ஹம்பாந்தோட்டையில் கணனி உற்பத்தி நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் குழு பிரதான நிறைவேற்று அதிகாரி 35000 ரூபாவுக்கு சந்தையில் மடி கணனி ஒன்றை பெற்றுக் கொள்ள முடியு மெனவும் குறிப்பிட்டார்.

B.P.O. துறையில் உள்ள தேசிய மற்றும் வெளிநாட்டு தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை பற்றி கௌரவ ஆர்.யோகராஜன் வினவினார். அமைச்சின் பங்களிப்பு பற்றி கௌரவ யோகராஜன் அவர்கள் வினவியதுடன் இலங்கை தகவல் தொட்பாடல் முகவரான்மையின் ஊடாக இது தொடர்பில் தேவையான முழு ஆதரவினையும் பெற்றுத் தருவதற்கு தகவல் மற்றும் தொடர்பாடல் சட்டததில் ஏற்பாடுகள் காணப்படுவதாக பிரதான நிறைவேற்று அதிகாரி குறிப்பிட்டார்.

நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நாட்டின் தேசிய நோக்கத்தை அடைவதற்கா கதனியார் நிறுவனங்களுக்கு தேவையான ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பயிற்றப்பட்ட அலுவலர்களை சேவையில் தக்கவைத்தக் கொள்வதற்கான முறைமை பற்றி கௌரவ ஜோன் அமரதுங்க அவர்கள் வினவியதுடன் ரெலிகொம் நிறுவனம் புதிய தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்துவதன் காரணமாக அந்தநிறுவனத்தில் இணைந்து பணியாற்றுவதற்கு ஊழியர்கள் விருப்பம் தெரிவிப்பதாக நிறுவனததின் பிரதான குழு நிறைவேற்றதிகாரி குறிப்பிட்டார்.

கௌரவ ஆர். யோகராஜன் அவர்களின் கேள்விக்கு பதிலளித்த இலங்கை தகவல் தொடர்பாடல் முகவரான்மையின் பிரதான நிறைவேற்று அதிகாரி தகவல் தொழில்நுட்பதுறையில் 90% இலங்கையர்கள் தக்கவைத்துள்ளதாகவும் இத்துறையின் 99% உழைப்புப்படையானது இலங்கையர்களே எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொலைதொடர்புகள், தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சின் செலவுத் தலைப்பு 155 இற்கான மதிப்பீட்டு வரைபானது குழுவினால் அங்கிகரிக்கப்பட்டுள்ளது.

| சமூகசேவைகள் அமைச்சு | 2013 | 2014 மீள் வரவுசெலவுத்திட்டம் | 2015 மதிப்பீடு |
|---|---|---|---|
| மொத்தச் செலவினம் | 3,480,193 | 4,503,150 | 5,070,000 |
| மீண்டெழும் செலவினம் | 3,196,369 | 3,999,600 | 4,670,000 |
| மூலதனச் செலவினம் | 283,824 | 503,550 | 400,000 |

| | | | |
|---|---|---|---|
| 124 - சமூகசேவைகள் அமைச்சர் | | | |
| மொத்தச் செலவினம் | 3,199,239 | 4,048,005 | 4,542,670 |
| மீண்டெழும் செலவினம் | 2,935,528 | 3,671,070 | 4,299,640 |
| மூலதனச் செலவினம் | 263,712 | 376,935 | 243,243 |
| 216 – சமூகசேவைகள் திணைக்களம் | | | |
| மொத்தச் செலவினம் | 280,953 | 455,145 | 527,330 |
| மீண்டெழும் செலவினம் | 260,841 | 328,530 | 370,360 |
| மூலதனச் செலவினம் | 20,112 | 126,615 | 156,970 |

சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி எமெல்டா சுகுமார் 2014 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கான இலக்குத் திட்டம் ஆகியன தொடர்பான ஒரு சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

ஓரங்கட்டப்பட்ட மக்களைப் பாராதீனப்படுத்தியும் ஊனமுற்றோருக்கான பிரவேசமின்றியும் கட்டிட அங்கீகாரம் பெறப்படும் விடயத்தை கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா சுட்டிக்காட்டினார். 2014 ஆம் ஆண்டு ஒற்றோர் மாதம் 16 ஆம் திகதியளவில் அத்தகைய பிரவேச வசதியேற்பாடுகளுக்கான கால வரையறை முடிவடைவதால் சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு கடினமாகவிருந்தது என சமூக சேவைகள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) தெரிவித்தார்.

கௌரவ பொன். செல்வராசா அவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், சமூக சேவைகள் அமைச்சுக்கான செயலாளர், பொருத்தமான ஒரு கட்டிடம் இல்லாத காரணத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு வாழ்க்கைத்தொழில் பயிற்சிப் பாடசாலையை அமைக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

கௌரவ பொன். செல்வராசா அவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், சமூக சேவைகள் அமைச்சுக்கான செயலாளர், 'சுப்பிரி வாசனா சம்பத்த' லொத்தர் நிதியத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் அங்கவீனர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தின் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

குழு, சமூக சேவைகள்அமைச்சின் 124, 216 ஆம் இலக்க செலவினத் தலைப்புகளுக்கான மதிப்பீடுகளை அங்கீகரித்தது.

கூட்டம் 3.30.பி ,மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது .

குழுபி.ப.12.15 மணிக்கு, 2014 ஆண்டுநவம்பர்மாதம் 12 ஆம்திகதிபுதன்கிழமைபி.ப.2.00 மணிவரைஒத்திவைக்கப்பட்டது.

**ஒப்பம் /திரு.நீல்இந்தவல**
**குழுவின்செயலாளர்**

## 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களின் செலவுத் தலைப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழுவின் ஒன்பதாவது கூட்ட அறிக்கை

**2014நவெம்பர் மாதம் 14, வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணி**

சமுகமளித்தோர்:
கௌரவ தினேஷ் குணவர்தன
கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா
கௌரவ ஜோன் அமரதுங்க
கௌவர ஆர். யோகராஜன்
கௌரவ (திருமதி) சுதர்ஷனி பர்நாந்துபுள்ளே
கௌரவ நிமல் சிறிபால த சில்வா (தவிசாளர்)
கௌரவ பொன். செல்வராசா
கௌரவ ஆர். யோகராஜன்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

திரு. நீல் இத்தவெல, பிரதிச் செயலாளர்நாயகமும் குழுச் செயலாளரும்

அறிவித்தலின் பிரகாரம் குழு கூடியது. தவிசாளர் கூட்டத்திற்கு சமூகமளிக்காததால் நீர்வழங்கல், வடிகாலமைப்புஅமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானுமாகிய கௌரவ தினேஷ் குணவர்தன அவர்களை கூட்டத்திற்குத் தலைமை தாங்குமாறு கௌரவ ஜோன் அமரதுங்க அவர்களினால் முன்மொழியப்பட்டு கௌரவ ஆர். யோகராஜன் அவர்களினால் வழிமொழியப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2. உறுப்பினர்களுக்கு மத்தியில் ஏற்கெனவே பிரதிகளுடன் விநியோகிக்கப்பட்டிருந்ததிருத்தங்கள் அடங்கிய வரைபு அறிக்கையை குழு அங்கீகரித்தது.

3. குழு கலந்தரையாடி பின்வருமாறு தீர்மானித்தது.

   (அ) 2014நவெம்பர் மாதம் 17, திங்கட்கிழமை அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்;

   (ஆ) 2014நவெம்பர் 17 ஆம் திகதி திங்கட்கிழமைஅந்த அறிக்கையின் பிரதிகளை அனைத்துப் பராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பகிர்ந்தளித்தல்.

4. கௌரவ ஜோன் அமரதுங்க பின்வரும் கோரிக்கைகளை குழுவின் முன் சமர்ப்பித்தார்.

   (அ) தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சுக்களின் செலவினத் தலைப்புகள் ஆராய்வதற்காக எடுத்துக்கொள்ளப்படும் போதான குழுக் கூட்டங்களுக்கு ஊடகவியலாளர்கள் சமூகமளிப்பது அனுமதிக்கப்படுதல்.

   (ஆ) பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளினால் தெரிகுழுக்களுக்கு உரித்தளிக்கப்பட்ட அதிகாரத்தத்துவங்கள் பிரகாரம் மேலும் விடயங்களைத் தெளிவுபடுத்தும் முகமாக சாட்சிகள் அழைக்கப்பவது அனுமதிக்கப்படுதல்.

   (இ) குழுவின் தவிசாளர் பதவி எதிர்கட்சி உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்படுதல்.

   (ஈ) கூட்டங்களின் சொல்லுக்குச்சொல் அறிக்கை குழு அறிக்கைக்கான ஒரு பின்னிணைப்பாக வெளியிடுதல்.

   எதிர்கட்சி உறுப்பினர்களும் இந்தக் கோரிக்கைகள் தொடர்பான தமது உடன்பாட்டை வெளிப்படுத்தினர்.

   இந்தக் கோரிக்கைகள் கௌரவ சபாநாயகரின் ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்படுமென தவிசாளர் குறிப்பிட்டார்.

5. கௌரவ தினேஷ் குணவர்தன மற்றும் குழு உறுப்பினர்கள் ஆகியோர் குழுவின் தவிசாளருக்கும், குழுவுக்குத் தலைமை தாங்கிய ஏனைய அமைச்சர்களுக்கும், பெறுமதியான பங்களிப்புகளை நல்கிய உறுப்பினர் சகலருக்கும், பெறுமதிமிக்க வினைத்திறன் வாய்ந்த சேவைகளை வழங்கிய பிரதிச் செயலாளர் நாயகத்திற்கும், பாராளுமன்றப் பணியாட்களுக்கும் தமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தனர்.

6. கூட்டம் பி.ப. 2.35 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

**ஒப்பம்/ நீல் இத்தவெல**
**குழுவின் செயலாளர்.**